v. 6 No. 37 21 Sep 1938

JL
N128K.N
N33-6.37
189161

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைடாக்கம், சென்னை.

Vol 6] 1933 வரு செப்டம்பர் மீ 21உ [No. 37

[stamp] 10 JAN 1934

18916

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 677
2. தமிழ்ப் பாடம்
அஷ்டப்பிரபந்தம்—திருவரங்கத்துமாலை 679
3. அப்பர் (64 கலை-வியாகரணம்-யாப்பியல்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 682
4. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 9-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 684
5. அமீல் (Henri Frederic Amiel)
T. R. இராஜகோபால் 685
6. கலித்தொகை (பாலைக்கலி, 26)
T. A. கனகசபாபதி முதலியார் 686
7. காற்றுமழை (அங்கம் 4. களம் 1.)
Shakespeare's Tempest 688
8. கம்பராமாயணம் (சடாயு உயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 689
9. பொதிகை நிகண்டு
(வீ - வெ - வே . வை - வெள)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 692

கலாநிலயம்

பிறவாதார் பிழைக்கமாட்டார்.

"ஒன்று மாண்டு கிடக்கின்றது, மற்றதோ பிறப்பதற்குச் சக்தியற்று இருக்கின்றது; இவ்விரண்டு உலகங்களுக்கிடையே நான் இப்பூமியில் தலைவைக்க இடமில்லாமல் அலைகின்றேன். உய்யும்வகை இனியில்லையோ வென்று கலுழும் என் கண்கள். மற்று, கடவுளின் சித்தத்தில் நம்பிக்கை வைத்த பக்திமான்களோ கலங்காத உறுதியுடன் கடமைபூண்டொழுகுகின்றனர். அவர்களைப்போல் நானுமே கையற்றுக் காத்திருக்கின்றேன். உலகமோ, அவர் கொண்ட உறுதியையும், யான் உகுக்கும் கண்ணீரையும் இகழ்ந்து பரிகசிக்கின்றது. அவருக்கு அருகுநின்று என் கண்ணீரைச் சொரியவே வருகின்றேன்," என்று மாத்யூ ஆர்னல்ட் என்பவர் பாடிய பாசுரம் ஆங்கில இலக்கியத்தில் அருமை வாய்ந்தது*. உலகத்தை உற்றுநோக்கி உணர்கின்ற ஊக்கமுடைய சில நல்லோர்தம் எண்ணங்களின் உண்மைநிலையை இவ் வரிய மொழிகளால் தெரிந்துகொள்ளலாம். ஒன்றுமேயறியாத விலங்குகளாகவேனும், எல்லாம் அறிந்த வித்தகர்களாகவேனும் இல்லாமல் இடையே நிகழ்வார் நிலை இன்னதே. எதனையோ இழந்துவிட்டோம் என்ற இரக்கமும், எதனையோ எய்தவேண்டும் என்ற விருப்பமும் இவ்விடைநிலை நிற்கின்ற மக்கள் உள்ளத்தில் உள. எனினும், இழந்தது இதுவென்று தெரியாமையாலும் எய்தவேண்டியது எதுவென்று உணராமையாலும் பலகால், அழுகைக் கிடமாகிய நிலையில் உவகையும் உவகைக் கிடமாகிய நிலைமையில் அழுகையுந் தோன்ற மானுட வாழ்க்கை வறியதோர் பரிகசக் கூத்தேயாகி முடிகின்றது. பண்டையுலகத்து அமைதி தொலைந்தது, புதிய உலகத்துப் பெருமையொன்றும் பிறக்கவில்லை.

இந்தச் செவ்வியில் ஒன்று உணரவேண்டும். பண்டைக் காலத்தைப் பொன்னுலகமாகக் கருதிப் புகழ்வது பொதுமானுட மதியினத்தின் வழக்காமென்றும், வளர்ச்சிமுறை உண்மையின்படி மானுட வாழ்க்கை மேனோக்கி நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே வருகின்றதென்றும், இனி வருங்காலத்திலேயே மாநுடர்செய்தியாவும் தனக்குரிய பெருமை சிறப்புக்களை எய்த நிற்கின்றனவென்றும் கூறுவார் எங்கும் பலருளர். இன்னவர் கேட்கின்ற கேள்விகள் உண்மையைப் பெரிது உணர்த்துவனபோல் மேற்பார்வைக்குத்தோன்றும். பண்டைக்காலத்தில் அனைத்தும் பங்குறநடந்ததென்னும் கருத்தைப் பரிகசிக்கும் இவர், அற்றைநாளினும், பொய்யும் திருடும் பஞ்சமும் நோயும் இருந்ததில்லையோ, எனக் கேட்பார். அக்காலத்திலுமிவையிருந்தன, இக்காலத்திலும் இவை இருக்கின்றன, என்னின் அக்காலத்திற் கிக்காலம் இழிந்ததாவது எங்ஙனம் என்ற ஐயம் ஏற்படுங்கால் இவையிரண்டிற்குமிடையே ஏற்றுக்கொள்ளவேண்டிய வேற்றுமை யொன்றுளதென்பதை மறத்தலாகாது. அக்காலத்திலும் பொய் இருந்திருக்கலாம்; எனினும், மெய்ம்மை என்பதே ஒன்றில்லை என்று மறுக்குஞ் சிற

* Wandering between two worlds, one dead,
The other powerless to be born,
With nowhere yet to rest my head,
Like these on earth I wait forlorn
Their faith, my tears, the world deride—
I come to shed them at their side,
—Matthew Arnold.

ப்பு இக்காலத்திற்கே உரியது. வாய்மையை எவ்வளவோ விளம்பரம் செய்கின்றவர் இருக்க இந்நாளின் சிறப்பு மெய்ம்மையை மறத்தலே என்று நாம் கூறுவது எவ்வாறு பொருந்தும் எனச் சிலர் ஐயுறலாம். இவ்வையந் தெளியச் சிறிது சிந்தனை வேண்டும். ஸத்தியத்தைப் 'பிரசாரம்' செய்வது வேறு, மெய்ம்மையே இயக்க வாழ்கின்ற வாழ்க்கை வேறு. பேசப்பேசப் பழுதடைகின்றவைகளில் சத்தியம் ஒன்று. தற்காலம் மேனாட்டில் தலையெடுத்துவரும் **ஸைக்கோ அனலிஸிஸ்** என்னும் புதியசாத்திர பண்டிதர்களில் ஒருபகுதியினர், ஷாமல்ஹௌஸேன் என்பவரைப்போல், சத்தியம் கற்பு அன்பு போன்றவைகளெல்லாம் பொய்யான கொள்கைகள் என்று சாதிப்பாரும் உளர். (இவர்தம் சொற்களையும் தன்மையையும் முன் 4வது வால்யூம், 13, 14, 15, 16, 17வது இதழ்களில் "உண்மையில் உழல்வார் திறம்" என்னுந் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரைகளில் விளக்கியிருக்கின்றோம்). இவர்கிடக்க ஏனைபோரும் சொல்லாலல்லாவிடத்துந் தம் செய்கையால் நினைவால் ஒவ்வொரு நிமிடமும் தம் வாழ்க்கையில் மெய்ம்மையை மறத்தன்றி விவகரிக்கும் வகையில்லை. முன்காலத்தில் பொய்வளர்ந்த மொழிபுகலும் துரியோதனர்கள் இருந்திருக்கலாம்; மற்று, பொய்ம்மையை வெல்வதற்கன்றி மெய்ம்மையை மெய்ம்மையின்பொருட்டே மகிழ்ந்து ஏற்றுக்கொண்ட உதிட்டிரர்களும் இருந்திருக்கின்றனரே. மெய்ம்மை இறுதியில் வெல்லலாம், அல்லது வெல்லாமற் போகலாம், அந்தக் காரியத்தை ஈசுவரன் நேராகவந்து குருக்ஷேத்திரத்தினிடையே தனது சித்தத்தின்படி நிகழ்த்திக்கொள்வார். அவ்வாறின்றி, பிறர் நமக்குச் செய்யும் வஞ்சனைப் பொய்களால் விளையும் இடுக்கண்களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளும் ஒரு கருவியாய் மெய்ம்மையை நாம் கையாள நினைக்கின்றபொழுதே மெய்ம்மைஎன்பதத்தனையும் மறத்தவர்களாகின்றோம் என்பது நுனித்து நோக்கவல்ல பயிற்சியுடையார்க்கல்லது புலப்படுவது அருமை. இது புலப்பட்டவுடன், முற்காலத்தில் பொய்யுரைத்தவர் இருந்திருப்பினும், இக்காலத்தில் மெய்ம்மையை மறுப்பவரன்றிப் பிறர் இல்லாமையின் அதனின்று இழிந்தது இது என்ன யாம் உரைத்ததன் பொருள் விளங்கவரும். அன்னவாறே மற்றவைகளையும் மதித்தல் வேண்டும். அக்காலத்தில் திருடர்கள் திருடினர், இன்று, வேறுவேறு பெயர்களை வைத்துத் திருடுவார்க்கல்லது இவ்வுலகில் இடமில்லை என்று விவகரிக்கின்றனர். திருடர்கள் திருடுவதற்கும், எல்லாரும் திருடர்கள் ஆகவேண்டுமென்பதற்கும் உள்ள வேற்றுமை கடலின் அகன்றது. மற்றும் என்! அக்காலத்தில் பஞ்சமும் நோயும் வரலாம், இக்காலத்திலோ அவை போவதே யில்லை.

இனி, இதற்கெதிர், அக்காலத்தில் தருமசாலைகள் இருந்தனவென்னின், இக்காலத்தில் மாத்திரம் இல்லையோ வெனக்கேட்டு, பொதுஜன உபாகரங்களுக்கென்று ஏற்பட்டிருக்கின்ற சங்கங்களை எடுத்துக் காட்டி, பண்டைய சிறப்பே, அத்திறத்தில் இன்றுமுளது எனக் கூறுவதுமன்றி, அக்காலத்தவரும் அவர் முறைகளைப் பாராட்டுகின்ற இக்காலத்தவரும் வகைதுறையின்றி வீணுய தருமங்களைச் செய்து பாழாக்கியதற்குப் பதிலாக இக்காலத்தவரோ, தகுதி வாய்ந்தவர்களுக்குத் தருமங்களைப் பகுத்தறிந்து செய்யும் உயர்வுடையவர்களாயிருக்கின்றார் என்றும் சாற்றுவார். இன்னவர்களை, ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸனே கடிந்து பேசட்டும்—

'We should wipe two words from our vocabulary: gratitude and charity. In real life, help is given out of friendship, or it is not valued; it is received from the hand of friendship, or it is resented. We are all too proud to take a naked gift; we must seem to pay it, if in nothing else, then with the delights of our society. Here, then, is the pitiful fix of the rich man; here is that needle's eye in which he stuck already in the days of Christ, and still sticks to-day firmer, if possible, than ever; that he has the money, and lacks the love which should make his money acceptable. Here and now, just as of old in Palestine, he has the rich to dinner, it is with the rich that he takes his pleasure: and when his turn comes to be charitable, he looks in vain for a recipient. His friends are not poor, they do not want; the poor are not his friends, they will not take. To whom is he to give? Where to find—note this phrase—the Deserving Poor? Charity is (what they call) centralised; offices are hired; societies founded, with secretaries paid or unpaid: the hunt of the Deserving Poor goes merrily forward. I think it will take a more than merely human secretary to disinter that character. What! a class that is to be in want from no fault of its own, and yet greedily eager to receive from strangers; and to be quite respectable, and at the same time quite devoid of self-respect; and play the most delicate part of friendship, and yet never be seen; and wear the form of man, and yet fly in the face of all the laws of human nature:—and all this, in the hope of getting a belly-god burgess through a needle's eye! Oh, let him stick, by all means; and let his polity tumble in the dust; and let his epitaph and all literature (of which my own works begin to form no inconsiderable part) be abolished even from the history of man! For a fool of this monstrosity of dulness there can be no salvation; and the fool who looked for the elixir of life was an angel of reason to the fool who looks for the Deserving Poor.'

மாத்யூ ஆர்னல்ட் மாழ்கும்படி இறந்துகிடக்கும் உலகம் இது என்பதை உணர்வதற்குதவியாய் இவைகளைக் காட்டினோம். இனி, பிறப்பதற்குச் சக்தியற்றுத் தவிக்கின்ற உலகத்தின் தன்மையை ப்ளேட்டோவின் கருத்திலும்கம்பர்தம் காவியத்திலும் திருவள்ளுவர் வாழ்க்கையிலும், திருச்சிற்றம்பலக்கோவையின் இசையிலும், காட்சியிற்றெளிந்த செவ்வியோர் காண்குவார். இன்ன நூல்களை ஓதிஉணர்வதற்கு வேண்டிய விருப்பமும் பயிற்சியும் மக்களுக்கு வாய்க்குமாயின் எவ்வண்ணம் யாதாகப் பிறந்ததென்பது தெரியாமலே அப்புது உலகம் வந்துவிடும் என்பதில் ஐயமில்லை. இவைகளை ஓதி ஓதி உள்ளம் உவந்தநாள் வாழ்ந்ததுஇவ்வுலகம். மற்று அவைகளைக் கைவிட்டோம். கைவிட நேர்ந்ததற்குக் காரணம் யாதெனும் சரித்திர ஆராய்ச்சி இங்கு அவசியமில்லை. அது யாவதாயினும்ஆகுக, விட்டநாள்தொட்டு உலகம் மாண்டுகிடக்கின்றது. இனி மீண்டு பிறப்பதற்கு மீண்டும் அந் நூல்களையே நாம் உயிரோடு உறவுறக்கொள்வதல்லால் வேறு நெறியில்லை. கலாநிலயம் தன் முழு மனமுங்கொண்டு சொல்வது இது. அந்நூல்களின்பால் விருப்பமும் பயிற்சியும் உண்டாவதற்குரிய கருமமும் செய்கின்றது. உலகம் பிறக்க யாரே உதவமாட்டார். இறந்த உலகத்திற்குப் புத்துயிர் அளிக்க இயலாது. மற்றோர் உலகமே பிறத்தல் வேண்டும். ஆதலால், உலகம் பிழைக்க வழிநாடுவதிற் பயனில்லை. பிறந்தபின் னன்றோ பிழைக்கக்கூடும்.

தமிழ்ப்பாடம் 87.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை

[667-வது பக்கத் தொடர்ச்சி]

நறைத்துள வம்புனை நம்பெரு மாள்விற
லுஞ்சொல்வதோ
மறைப்பரி பூட்டிய மாநிலத் தேரிலை
வாளெயிற்றின்
கறைப்பணி நாணுடை மேருவில் லில்லை
கடும்பவனச்
சிறைத்தழ லம்பில்லை யொன்னா ரறுபுரஞ்
செற்றதற்கே. 11.

பதப்பிரிவு:—நறை துளவம் புனை நம் பெருமாள் விறல் நாம் சொல்வது ஓ மறை பரி பூட்டிய மா நிலம் தேர் இல்லை வாள் எயிறுஇன் கறை பணி நாண் உடை மேரு வில் இல்லை கடு பவனம் சிறை தழல் அம்பு இல்லை ஒன்னார் ஆறு புரம் செற்றதற்கு ஏ.

பதவுரை.

(திரிபுரம் அழிக்கும்போது சிவபிரானுக்கு இருந்ததுபோல், கண்ணன்) ஒன்னார் - தன் பகைவர்களுடைய, அறுபுரம் - ஆறு பட்டினங்களை, செற்றதற்கு- அழித்ததற்கு, மறை - நான்கு வேதங்களாகிய, பரி- குதிரைகள், பூட்டிய - கட்டிய, மா - பெரிய, நிலம்- பூமியாகிய, தேர் - தேர் ஒன்றும், இல்லை - இருந்ததில்லை; வாள்-வாள்போன்ற, எயிற்றின்-பல்லினது, கறை - விஷத்தைதயுடைய, பணி - பாம்பை, நாண் - நாணாக, உடை - உடைய, மேரு - மேருமலை யென்னும், வில்- வில் ஒன்றும், இல்லை-இருந்ததில்லை; கடு- வேகம் பொருந்திய, பவனம் - வாயுபகவானையே, சிறை - சிறகாகப்பெற்ற, தழல் - நெருப்பாகிய, அம்பு - அம்பு ஒன்றும், இல்லை - இருந்ததில்லை; (இவ்விதச் சாதனங்கள் ஒன்றுமில்லாமலே அறுபுரங்களை அழித்தாராகையால்), நறை - வாசனையுடைய, துளவம்-துளசிமாலையை, புனை-அணிந்த, நம்பெருமாள்- எம்பிரானது, விறல் - வல்லமை, நாம் - என்போன்றவர், சொல்வதோ - சொல்லக்கூடிய தாகுமோ!

விரிவுரை:—சிவபிரானைப் போரால் குறித்து ஒன்றும் இச் செய்யுளில் வெளிப்படையாகக் கூறப்படவில்லையாயினும், குறிப்பாகச் சிவபிரானுக்கும் திருமாலுக்கும் உள்ள வேற்றுமையை இங்கு நினைப்பூட்டித் திருமாலின் உயர்ச்சி பாராட்டப்பெற்றிருக்கின்ற தென்பதை எளிதில் நாம் தெரிந்துகொள்ளலாம். சிவபிரான் திரிபுர சம்ஹாரம் செய்வதற்கு இப்பூமியைத் தேராகவும், நான்கு வேதங்களையும் அத்தேரினிற் பூட்டிய குதிரைகளாகவும், மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை அதற்கு நாணாகவும், திருமாலையே அம்பாகவுங் கொண்டார், என்று சில புராணங்கள் கூறும். (ஆயினும், பிள்ளைபெருமாள் ஐயங்கார், தன் திருமாலைச் சிவன் அம்பாகக்கொண்டான் என்றுகூற மனங்கொள்ளாமையாலோ யாதோ, வாயுபகவானை இறகாகக்கட்டியுள அக்கினியே அம்பென்று மாற்றிவிட்டார்.) "முப்புரங்களை யழிக்கச் சிவபிரானுக்கு இத்தனைச் சாதனங்கள் வேண்டியிருந்தனவே—எம்பெருமாள் ஒருசாதனமும் இல்லாமல் ஆறுபுரங்களை அழித்தனரே, ஆகையால் இவர் அவரைக்காட்டிலும் எத்துணைச் சுயபராக்கிரமசாலி பாருங்கள்" என்று ஆர்வத்துடன் மொழிகின்றார் நம் கவி.

பார்க்கப்போனால், அவ்வம்பையும் வில்லையும் சிவபிரான் உபயோகப்படுத்தவில்லை; சிரிக்கத்தான் சிவபிரான் சிரித்தார், அவ்வளவில் முப்புரங்களும் சாம்பராயின. திருமாலோஎனின் அறுபுரங்களைப்பொருது வென்றார். சிவபிரான், சிரித்ததுதே போதும் என்றால், 'நறைக்கொன்றைத் தார்புனை நம்பெருமான் விறல் நாம் சொல்வதோ''வெனச் சிவன்பக்ஷமாக வேறோர் கவி வேண்டுமெனின் பாடவுங்கூடும். எனினும்வாதிற் கிழுக்கும் புன்புத்தியேயன்றிப் பக்தியென்பது சிறிதுமில்லாத மற்றையோரைப்போ லல்லாமல் பிள்ளைபெருமாள் ஐயங்கார் திருமாலினிடத்துள்ள கரைகடந்த அன்பினால் இவ்வாறு பாடுகின்றாராதலால் ஓரம்பேசுகின்றார் என்னுங் குற்றத்திற்கு ஆளாகமாட்டார்.

இந்தச் செய்யுளில் வேற்றுமை அணி எனப்படும் ஒரு சிறந்த அணி அமைந்திருக்கின்றது. ஒப்புடைய இரண்டினை வேற்றுமைப்படுத்திக் காட்டுவது அதன் இலக்கணம். பொதுவிலக்கணம் இதுவாயினும் இவ்வணியானது பற்பலவிதங்களில் பயின்றுவரும்:—

I. உபமானம் உபமேயம் ஆகியஇரண்டுபொருள்களையும் சொல்லி, அவ்விரண்டிற்கும் உள்ள ஒப்புமையை வெளிப்படையாகக் காட்டிப் பிறகு அவையிரண்டிற்கும்உள்ள வேற்றுமை இன்னதென்றுதெரியச் சொல்வது ஒருவகையாகும். "அமுதமே போன்று இனியது பாவாய் நின்மொழி; அமுது கடலிற் பிறந்தது, மொழியோ நின்வாயிற் பிறக்கும்" என்று வருகின்றபோது, அமுதம் என்னும் உபமானமும் மொழி என்னும் உபமேயமும் இனிமையாகிய பொதுத்தன்மையும் கூறிப் பின் அவையிரண்டும் இடத்தாலேயே வேறுபாடு அடைவது காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாறு யாவுங் கூறப்பட்டிருப்பதுபோல் வெளிப்படையாக வருகின்ற வேற்றுமையணியைக் **கூற்று வேற்றுமை** யணி என்று அழைக்கலாம். [கூற்று-சொல்]

இவ்வாறின்றி, "மன்மதன் கரும்புவில்உடையான்; இப் பெருமகன் இரும்புவில்உடையவன்" என்று உரைக்குங்கால், அது "இப்பெருமகன் அழகினால் மன்மதனை ஒத்திருக்கின்றான், இவனுக்கு வில் இரும்பு, அவனுக்குக் கரும்புவில்—இதுவே வேறுபாடு" என்ற பொருள்படுகின்றதாயினும், மன்மதனை இவன் அழகினால் ஒத்திருக்கின்றான் என்ற கருத்து வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கவில்லை. வில்லின் வேற்றுமை மாத்திரம் காட்டப்பட் டிருப்பதைக்கொண்டு அழகின் ஒப்புமையைக் குறிப்பாக உணரவேண்டும். இவ்விதம் வேற்றுமை தெரிந்துதோன்ற ஒப்புமை குறிப்பாகநிற்கின்ற வேற்றுமையணி குறிப்பு வேற்றுமையணி என்று அழைக்கப்படும்.

II. இனி, கூற்று குறிப்பு என்ற பிரிவை வைத்துக்கொண்டு, அவை ஒவ்வொன்றிற்குள்ளும் இரண்டு உட்பிரிவுகள் காணலாம்.

(1) "அமுதமே போன்று இனியது நின்மொழி; அமுதம் கடலிற் பிறந்தது, மொழியோ நின்வாயிற் பிறக்கும்," என்று கூற்றுவேற்றுமைக்கு முன் காட்டிய உதாரணத்தில், ஒன்று கடலிற் பிறந்தாலும் மற்

றது வாயிற் பிறந்தாலும் அவ்வேற்றுமையால் அமுதத்திற்கும் அவளது மொழிக்கும் உயர்வுதாழ்வு ஒன்றும் ஏற்படவில்லை. அவை யிரண்டும் இனிமையில் சமம் என்றே கருதப்படுகின்றன. எனவே இதனைக் **கூற்று வேற்றுமைச் சமம்** என்று கூறலாம்.

அவ்வாறின்றி, "அமுதமே போன்று இனியது நின்மொழி, ஆயினும்,விஷத்தொடு தோன்றியது அமுதம், அஃதில்லை நின்மொழிக்கு" என்று மாற்றினால் ஒப்புமைத் தன்மையைக் காட்டுவதுமல்லாமல் உபமேயமாகிய மொழிக்கு ஒரு உயர்வும் அளிக்கப்படுகின்றது. அவ்வாறே, "மேகம்போல் கைம்மாறு கருதாமல் கொடுப்பார் வள்ளலார், ஆயினும் மேகமோ குறித்த காலத்திலேயே மழைபெய்யும்; வள்ளலார் எந்நாளும் கொடுப்பார்," என்பதிலும் மேகத்திற்கும் வள்ளல்களுக்குமுள்ள கொடையாகிய ஒப்புமை வெளிப்படையாகக் கூறப்பட்டுப் பிறகு மேகம் காலத்தில் பெய்வதாக வள்ளல்கள் எக்காலமும் கொடுப்பர் என்னும் வேற்றுமையும் காட்டப்பட்டு, அவ்வேற்றுமையினால் உபமானமாகிய மேகத்தினும் உபமேயமாகிய வள்ளல்களது உயர்வு சிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் வருவனவற்றைக் **கூற்று வேற்றுமை உயர்ச்சி** என்றழைக்கலாம்.

எனினும், சிறப்பினால் ஒப்புமையுடைய இரண்டு பொருள்களில் ஒன்றிற்கு ஒன்று உயர்ந்திருத்தலைத்தான் காட்டவேண்டுமென்னும் நியதியில்லை. தாழ்ந்தவைகள் இரண்டினிற்குள் ஒன்றற்கு ஒன்று பின்னுந் தாழ்ந்திருக்கின்றதென்று வேற்றுமைப்படுத்தினாலும் அதனையும் வேற்றுமை உயர்ச்சி என்றுதான் அழைக்கவேண்டும். "கழுதையைப்போன்ற இழிவினர் கல்லாதவர்; கழுதைக்குப் பொறுமையுண்டு, அதுவுமில்லை கல்லாதவர்க்கு," என்னுங்கால், இழிவினால் இருக்கும் ஒப்புமையிலும் ஒன்றற்கு ஒன்று தாழ்மையாவது காணலாம். முன் மேன்மேலுயர்ச்சியணியைப்பற்றிக் கூறியபோது (வால்யூம் 5-648வது பக்கம்) சிறப்பேயாயினும் தாழ்வேயாயினும் 'உயர்ச்சி' என்றே கூறவேண்டும் என்று சொல்லியது நினைவில் இருக்கலாம். அப்படியே இங்கும், ஏற்றத்தில் ஏற்றமாயினும் சரி, தாழ்வில் தாழ்வாயினுஞ் சரி, காட்டிய வேற்றுமையால் அது பெறப்படுமாயின் வேற்றுமை உயர்ச்சி என்பதிலேயே அவ்விரண்டும் அடங்கும்.

(2) இனிக் குறிப்புவேற்றுமையிலும் சமம் இருக்கலாம், அல்லது உயர்ச்சி யிருக்கலாம்.

"மன்மதன் கரும்புவில் லுடையவன், இப்பெருமகன் இரும்புவில் லுடையவன்," என்ற உதாரணத்தில், வில்லால் வேற்றுமை இருப்பினும் அவ்வேற்றுமைபற்றி இருவருக்கும் ஏற்றந்தாழ்வு ஏற்படவில்லை; ஆதலால், இது **குறிப்பு வேற்றுமைச் சமம்.**

"மடவாரை யடர்ப்பான் மன்மதன், இவனோ அவர்பால் அன்பேஉடையன்," என்று கூறினால், அழகினால் அவ்விருவருக்கும் உள்ள ஒப்புமை குறிக்கப் பெறுவதோடு, காட்டிய வேற்றுமையால் மன்மதனினும் இவனது உயர்ச்சி ஏற்படுகின்றது. இது **குறிப்பு வேற்றுமை உயர்ச்சி.**

"உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலும், கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு," என்ற குறள், இக்குறிப்பு வேற்றுமை உயர்ச்சியணிக்கு ஒரு நல்ல உதாரணம். கள்ளைப்போல் காமமும் களிப்பும் மகிழ்ச்சியும் தரும் என்னும் ஒப்புமை வெளிப்படையாகக் கூறப்பட்டில்லாமையாலும், கள்ளை உண்டே களிப்பும் மகிழ்ச்சியும் அடையவேண்டியிருக்கக் காமம் கண்டும் நினைத்தும் மகிழ்வுதரக் கூடியது என்னும் வேற்றுமை காட்டப்பட்டிருப்பதாலும், அவ்வேற்றுமையால் கள்ளினும் காமத்தின் உயர்ச்சி தோன்றுவதாலும், இது குறிப்பு வேற்றுமை உயர்ச்சி. "தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" எனவரும் குறளும் இதுவே.

கம்பராமாயணம் பாலகாண்டம், கைபடைப்படலம் 2-வது செய்யுளாகிய,

தாயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினன்
சேயிரு விசும்பிடைத் திரியுஞ் சாரணர்
நாயக னிவன்கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றைய நீங்கினர்

என்பதும், ஐயவணியைத் தன்னுள் கொண்டிருந்தாலும், குறிப்புவேற்றுமை உயர்ச்சி, என்று கூறலாம். ஆயிரங்கண்கள் இந்திரனுக்கு வந்த குற்றமும் தயரதனுக்கு இல்லை என்பதை இதனால்காட்டித் தயரதன் உயர்வைத் தோற்றுவிக்கின்றது.

III. கூற்று வேற்றுமைச்சமம் கூற்று வேற்றுமை உயர்ச்சி, குறிப்புவேற்றுமைச் சமம் குறிப்புவேற்றுமை உயர்ச்சி, என்னும் இந் நான்கு பிரிவுகள் ஒவ்வொன்றும் இனி இரண்டிரண்டுவிதமாகப்பிரியலாம்.

(1) இதுவரையில் கொடுத்த உதாரணங்களிலெல்லாம், ஒன்று உபமானமாயும் ஒன்று உபமேயமாயும் அமைய அவைகளுக்கிடையே உள்ள வேற்றுமைகள் காட்டப்பட்டன. உபமானத்திற்கு உபமேயமாயிருப்பது ஒருபொருள், அவ்வொருபொருள் தனக்கு ஒப்புமையுடைய உபமானத்தினின்று வேற்றுமை அடைகின்றதாயிற்று. அமுதத்திற்கும் சொல்லிற்கும், மன்மதனுக்கும் தலைமகனுக்கும், கூற்றினாலும் குறிப்பினாலும், சமமாகவும் உயர்வாகவும் வேற்றுமை காட்டிய முன் உதாரணங்களில் உபமானத்திற்கு ஒப்புமை உடையதாயிருந்தபொருள் ஒவ்வொன்றே. ஆகையால் அவைகளை **ஒருபொருள் வேற்றுமையணி** என்னலாம். எனவே முன் சொன்னவைகள் முறையே, ஒரு பொருள் கூற்று வேற்றுமைச் சமம், ஒரு பொருள் கூற்று வேற்றுமை உயர்ச்சி, ஒரு பொருள் குறிப்பு வேற்றுமைச் சமம், ஒரு பொருள் குறிப்பு வேற்றுமை உயர்ச்சி, என்று அமைவனவாகும்.

(2) முன் சொன்ன உதாரணங்களின், உபமானம் உபமேயம் என்ற இரண்டுபொருள்கள் இருந்தபோதிலும், ஒருபொருள் வேற்றுமை என்று கருதுவது ஏன் என்னும் சந்தேகம் விளையலாம். அவைகளில், எடுத்துக்கூறிப்பாராட்டவந்தபொருள் உபமேயமாய் நிற்கின்ற வொன்றே. மற்றது இவ் வுபமேயப்பொருளின் தன்மையை விளக்கவந்த உபமானமாக உதவுகின்றதேயன்றி, அவ் வுபமானப்பொருள் பாராட்டப்படவில்லை. அவ் வுபமானத்திற்குச் சமமாயினும் அதனில் உயர்ந்தேனும் கொண்டாடவேண்டி நிற்பது உபமேயப்பொருள் ஒன்றேயாதலால், அன்னவைகளை ஒருபொருள் வேற்றுமையணி என்று அழைக்கின்றோம்.

அப்படிக்கு இன்றி, ஓரேசமயத்தில் கொண்டாடிப் பாராட்டப்படுகின்றபொருள்கள் இரண்டாகஇருக்கவுங் கூடும். இவை இரண்டிற்கும் சில தன்மைபற்றி

ஒப்புமை இருக்கலாம். இருக்க, அவை இரண்டும் சமமான இருவேறு பொருள்களென்றும், அல்லது ஏற்றந்தாழ்வுடைய இருவேறு பொருள்களென்றும் வேற்றுமையடையலாம். கூற்றிலும் குறிப்பிலும் இது நிகழ இயலும். எனவே, இருபொருள் கூற்று வேற்றுமைச்சமம், இருபொருள் கூற்று வேற்றுமை உயர்ச்சி, இருபொருள் குறிப்பு வேற்றுமைச்சமம், இருபொருள் குறிப்பு வேற்றுமை உயர்ச்சி, என இப்பிரிவும் நான்கு வகைப்படும்:—

(a) "இன்பமயமாகியும், துன்னினரைத் தன்வயமாக்கவும், வேண்டுவோர்க் கெளியதாயும், அமைந்தவற்றுள், கல்வியொன்று கடவுளொன்று."—இதனில், ஒன்றற்கொன்று உபமானம் உபமேயம் என்ற கருத்தின்றிக் கல்வி கடவுள் என்னும் இரண்டு பொருள்களும் கொண்டாடப்படுகின்றன. இவைகளது ஒப்புமைக்குக் காரணமாயிருக்கின்ற விஷயம் வெளிப்படையாக இருக்கின்றது. பிறகு, இப் பொதுத்தன்மை பொருந்தி இருப்பினும் பொருள்கள் வெவ்வேறு என்பது கூறப்பட்டிருக்கின்றது. அவ்வாறு பொதுத்தன்மையுடையவாய் வெவ்வேறு பொருள்களென நிற்கின்ற இவை தம்முள் சமமேயன்றி யொன்றற்கொன்று ஏற்றந்தாழ்வு இல்லாமையுந் தெரிகின்றது.

(b) நிரயம் நீக்கலால், மொழியின் இன்பத்தால், புதல்வரைக் கல்வி ஒக்குமாயினும்; புதல்வரால் வருவதெல்லாம் கல்வியால்வரும், மற்றக் கல்வியால் வருவதெல்லாம் புதல்வரால் வருவதில்லையே.

இங்குப் புதல்வர் கல்வி யென்னும் இருபொருள்களும், நிரயம் நீக்கல் மொழியின் இன்பம் என்னும் ஒப்புமையைக்கொண்டு பாராட்டப்படுகின்றன. அவ்வொப்புமையும் வெளிப்படை. இந்த ஒப்புமை உடைய இப்பொருள்கள் இருவேறு என்பதால் வேற்றுமை; அதனோடு நில்லாமல் கல்வியின் உயர்ச்சியும் காட்டப்பட்டிருக்கின்றது. ஆகையால் இது, இருபொருள் கூற்று வேற்றுமை உயர்ச்சி.

(c) இருநிதி உடையது இமையவர் நாடு; இவ்வுலகம் இருகை வள்ளலெம் மன்னன் உடைத்து.

இமையவர்நாடு இவ்வுலகம் என்னும் இரண்டுபொருள்கள் ஒரு ஒப்புமைப் பொதுமையால் பாராட்டப்படுகின்றன. முன்னிரு உதாரணங்களிற்போல் ஒப்புமை என்னவென்பது இங்கு வெளிப்படையாக இல்லை. சங்கநிதி பதுமநிதி என்னும் இரண்டு நிதிகளும் கேட்டவர்களுக்குக் கேட்டவைகளெல்லாம் கொடுப்பனவாய் விண்ணாட்டில் இருக்கின்றன; அவ்விதமே, இவ்வுலகிலும் இரண்டு கைகளாலும் வரையாது கொடுக்கின்ற மன்னன் இருக்கின்றான், என முதலில் உணர்ந்து, அந்தக்குறிப்பினால் விண்ணுலகிற்கும் இம்மண்ணுலகிற்கும் ஒப்புமையைக் கண்டுபிடிக்க வேண்டிவருகின்றது. இவ்விரு உலகிற்கும் ஏற்றந்தாழ்வு ஒன்றும் இதனால் ஏற்படவில்லை. ஆகையால் இது, இருபொருள் குறிப்பு வேற்றுமைச் சமம்.

(d) வண்டுகள் களிப்பன செந்தாமரை, கண்கள் உடைத்து இம்மாதராள்முகம். மாலையில் வாடும்அம் மலர், இவள் முகம் ஒருபோதும் நந்துத லில்லையே.

தாமரையும் மாதர்முகமும் பாராட்டப்பெறுவதாலும், தாமரையில் களிக்கும் வண்டுபோல், இம்முகம் மதர்த்த பார்வையை உடையது என்பது குறிப்பாயிருத்தலாலும், மாலையில் மலர் வாட, இம்முகம் ஒருபோதும் வாடாமையாகிய வேற்றுமை இருப்பதாலும், அவ்வேற்றுமையால் முகத்தினது ஏற்றந் தோன்றுவதாலும், இது முறையே இருபொருள் குறிப்பு வேற்றுமை உயர்ச்சி அணி ஆகின்றது.

IV. ஆதலின் எண்வகைப் பிரிவினை யுடையது இவ் வேற்றுமையணி. இனி, இவ்வெண்வகைகளில் ஒவ்வொன்றும், வேற்றுமை யடைவது நான்கு விடயங்களைப் பற்றியதாகலாம். பொருள் இரண்டு என்ற அளவில் வேற்றுமை காண்பதோடு நிற்பதும், குணத்தினால் சாதியால் தொழிலால் வேற்றுமைகள் தோன்றுவதும், உண்டு:—

i. மலையில் பிறந்து, மேலோர்தொழ விளங்கி, வையத்து இருளகற்றும் இரண்டினுள், ஒன்று சூரியன், மற்றது தன்நேர் இல்லாத தமிழ் [சூரியன் உதயகிரியிலும் தமிழ் பொதியின்மலையிலுள்ள அகத்தியர்பாலும் பிறக்கலாயின]

ஒப்புமையால்ஒன்றுபட்ட சூரியனும்தமிழும் வெவ்வேறு பொருள்களென்பதன்றி வேறொன்றும் அதன்வேற்றுமைக் காதாரமில்லை.—ஆதலின் இது பொருளோடுகூடிவந்த இருபொருள் கூற்று வேற்றுமைச் சமம் ஆகும். (இவ்விதமே பொருளோடு கூடி மற்ற வகைகளும் வருதற்கூடும்)

ii. உன்னத நிலையினால், அசைவிலா நேர்மையால் குன்றுபோல்வர் சான்றோர். கல்லென் றிறுகிய தன்மையது குன்று, கோமளமானவர் சான்றோர்.

ஒப்புமையால் ஒன்றாகிய குன்றிற்கும் சான்றோர்க்கும் இங்குவேற்றுமை குணத்தினால் (ஒன்று கடினமானது, மற்றது மெதுவானது) விளைந்தது.

iii. ஈட்டுதற் கரியதும், போற்ற வளர்வதும், ஆகிய செல்வம் இரண்டினுள், ஒன்று கல்வி மற்றது பொருள். கொடுக்கக் குறையும் பொருள், கொடுத்தாலும் கல்வி நிறைவொழியக் குறைவில்லையே.

செல்வத்தில், பொருட்செல்வம் கல்விச்செல்வம் என்று அமைகின்றசாதிபேதத்தால் ஒன்றற்கொன்று இங்குக் காட்டியபடி வேற்றுமை யடைந்தது.

iv. வளமமை செல்வரும் வறியமாக்களும், கைகளை நீட்டுவார்; ஆயினும் கொடுப்பதற்கு நீட்டுவார் அவர், ஏற்பதற்கே இவர்.

கைந்நீட்டல் என்னும் ஒப்புமையுடைய வள்ளலும் வறியோரும், நீட்டுகின்றதால் புரியும் கொடுத்தல் ஏற்றல் என்னும் தொழிலால் வேற்றுமை அடைகின்றனர்.

V. இவைகளன்றி இவ்வேற்றுமையணி, விலக்கியல்தன்மைபெற்றும், சிலேடையோடு கலந்தும்வரும்.

i. தண்மையும் அகலத்தோடு ஆழமும் மேதகு பொருள்களும் உடையதேனும் கடல், நண்ணுவோர்க்கு அச்சம் புகுத்தலால் தமிழ்மொழிக்கவியை ஒக்குமோதான்.

இதனில், தண்மை அகலம் ஆழம் பொருட்செறிவு அனைய தன்மைகளால் தமிழும் கடலும் ஒக்குமாயினும், விரும்பினரை அழைத்துக்கொள்ளும் தமிழைப்போலல்லாது, அணுக வருவோர்க்கு அச்சம் விளைவிக்கின்ற கடலினது பெருமை இங்கு விலக்கப்பட்டது. ஒப்புமையோடு ஒன்றற்கொன்று ஏற்றங் காட்டுகின்ற, இருபொருள் குறிப்பு வேற்றுமை உயர்ச்சி என்று இதனை எண்ணப்படாது.

விலக்கியல், உயர்ச்சியினின்று வேறுபட்டது. உயர்ச்சி ஓரளவுவரையில் ஒப்புமையால் வரும் பெருமை இரண்டிற்கும் உண்டென்று காட்டிப் பிறகு பின்னுமோரளவு ஒன்றில் ஒன்று மிகுந்தது என்னும்படி வரும். விலக்கியல், ஒப்புமைக்குரிய தன்மைகள் வாய்ந்த பொருள் இருப்பது இரண்டானாலும், அத்தன்மைகளால் பெருமையடைந்தது ஒன்று என வைத்துக்கொண்டு மற்றதற்குப் பெருமையே இல்லை என்ன விலக்கி, உபமானமும் ஆகாது அது எனக் கழித்துவிடும்படி வரும். இங்குக் கடல் தமிழை ஒவ்வாதெனக் காரணங்காட்டி விலக்கப்பட்டிருக்கிறது.

ii. மலர்ந்தொசிந்து மன்னன் புயம் மேவுவாள் ஆயினும் இவள் கோடியாள் அல்லள்காண்.

மலர்தல் ஒசிதல் முதலிய தன்மைகளால் இம்மாதிற்கும் பூங்கொடிக்கும் ஒப்புமை உரைக்கப்பெற்றது. ஆயினும், கொடியாள் என்பதற்குக் கொடி போன்றவள், கொடிய குணத்தையுடையவள், என்னும் இருபொருள்களையும் சிலேடையாக வைத்து, ஒரு பொருளில் கொடியாளாயினும் மறுபொருளில் அது ஆகாள் என்னும் வேற்றுமை அங்கு நிகழலாகின்றது. ஆதலின் இது சிலேடையைத் தொடர்ந்து வந்த வேற்றுமை.

இவ் வேற்றுமையணியை வடமொழியில் லியதிரேகாலங்கார மென்றழைப்பர்.

இவ்விலக்கணங்களை நினைவிற்கொண்டு பார்க்கும்போது "நறைத்துளவம்புனை நம்பெருமாள் விறல் நாம் சொல்வதோ" என்று துவக்கும் இச்செய்யுள், தொழில்பற்றி வந்த இருபொருள் குறிப்பு வேற்றுமை உயர்ச்சி அணி ஆவது எளிதில் தெரியவரும். சிவனும் விஷ்ணுவும் இருபொருள்கள். [சிவன் கூறப்படவில்லையாயினும், உலகறிந்த முப்புரத்தை அவன் எரித்தசெய்தி இங்கு எச்சமாயிருக்கின்றது.]

இவர் ஒன்றூர்புரங்கள் செற்றது ஒப்புமை. அது ஒப்புமையென்று வெளிப்படையாக எடுத்துக்காட்டிக் கூறப்பெறாமையால், குறிப்பு.

செற்ற தொழிலை இவ்விருவர் புரிந்த வகையில் வேற்றுமை அமைந்திருக்கின்றது. சிவனுக்கு மேரு முதலிய உதவிகள் இருக்கத் திருமாலோ தனிப்போராற்றலால் வென்றான்.

இவ்வேற்றுமையால் சிவனினும் திருமால் உயர்ந்தவன் ஆகின்றான். இதுவுமன்றி, சிவன் அழித்த புரங்கள் மூன்றாகத் திருமால் ஆறு புரங்கள் அழித்தான் என்பதாலும் உயர்ச்சி தோன்றும். இதுவரையிற் கருதினால், மூன்று ஆறு என்னும் அளவுகள் பண்பு அல்லது குணங்களாதலால், குணத்தோடு கூடிய இருபொருள் குறிப்பு வேற்றுமை உயர்ச்சி என்பதும் ஒருவாறு பொருந்தும். ஆயினும் தொழிலின் சிறப்பையே மிகுதியாகக் காட்டி இச்செய்யுள் நடப்பதால் அம் மிகுதிபற்றித் தொழிலொடு கூடிய வேற்றுமை என்று இதனை அழைப்பதே தக்கது.

அப்பர்

அப்பரும் அறுபத்திஞன்கு கலைகளும்— 30. வியாகரணம்

[664-வது பக்கத் தொடர்ச்சி]

II. எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

இது தமிழலக்கியத்திலுள்ளது ஒரே வகை. அதன் வாய்பாடு "நால் விளம், மும்மா." நான்கு விளச்சீர்களும், மூன்று மாச்சீர்களுமாய் வருமேயன்றி, மூன்று விளச்சீர், நான்கு மாச்சீர்களேனும், கனிச்சீர்களேனும் விளங்காய்ச்சீர்களேனும் விரவியும் வாரா. மாங்காய்ச்சீர்கள், விளச்சீர் வருவதற்கு பதிலாய் வருதல், ஒழிபியல் விதியை அநுசரித்தேயாம். ஆதலால் சந்தமில்லாத எழுசீர் விருத்தங்கள் நால்விள மும்மா வென்னும் விதிக்குக் கட்டுப்படுமென் றுணர்க:

சோதியே சுடரே சூழொளி விளக்கே
  சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
  பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
  நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே யடியே னாதரித் தழைத்தால்
  அதெந்துவே யென்றரு ளாயே.

—திருவாசகம் - அருட்பத்து 1.

III எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

இது இரண்டே வகை. காய்ச்சீர் இரண்டும், மாச்சீர் ஒன்றும், தேமாச்சீர் ஒன்றும் ஒவ்வொரு அரையடிக்கு வருவது:—

சந்திரனை மாகங்கைத் திரையால் மோதச்
  சடாமகுடத் திருத்துமே சாம வேத
கந்தருவம் விரும்புமே கபால மேந்து
  கையனே மெய்யனே கனக மேனிப்
பந்தணவு மெல்விரலாள் பாக னாமே
  பசுவேறு மேபரம யோகி யாமே
ஐந்தலைய மாசுணங்கொண் டரையார்க் கும்மே
  அவனாகி லதிகைவீ ரட்ட னாமே

—திருவதிகை வீரட்டானம் -
அடையாளத் திருத்தாண்டகம் 1.

காய்ச்சீருக்குப் பதிலாய் நீண்ட விளம் இதில் வருவது விருத்த இலக்கண மரபாம் *

இரண்டாவது வகை-ஒவ்வொரு அரையடியிலும் முதற்சீர் குறிய மாச்சீரும், இரண்டாவது கூவிளச்சீரும், மூன்றாவது விளச்சீரும், நான்காவது மாச்சீருமாய் வருவது

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
  புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
  குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற்கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
  அடிய னேனிடர்ப் படுவது மினிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
  திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

—திருவாசகம்.

* விளமது வருமென விதித்த வீட்டினில்
விளமது கொண்டிலாக் காயும் வேண்டுவர்
விளமது நீண்டது காயின் மேவலு
முளதென வோர்கவொண் டொடிக்கைத் தையலே
விருத்தப்பாவியல் - ஒழிபியல் 1

அப்பர் தேவாரத்திலும் இத்தகைய விருத்தங்கள் 3-ம் திருமுறையில் (6-ம் திருமுறை) உள. ஆயினும் அவை மேற்கண்ட உதாரணம்போலிராமல் இசைத் தமிழ்ச் சம்பந்தத்தில் சீர்கள்நிலை சற்றுமாறிக் காணப்படுகின்றன. திருவதிகைவீரட்டானம் காப்புத்திருத்தாண்டகம் இத்தகைய விருத்தமே. திருக்கருகாவூர் திருத்தாண்டகத்திலும் இதனைக் காணலாம். திருவிடைமருது - திருத்தாண்டகம் இதன் வேறுபாட்டில் காணக்கூடிய ஒரு வகையே யாகும். மற்றும், திருத்தாண்டகப் பதிகங்களில் ஒவ்வொரு செய்யுள் தற்செயலாய்க் காணப்படுவதும் உண்டு:—(உ - ம்)

"ஓசை யொலி யெலா மானாய் நீயே"

என்று ஆரம்பிக்கும் திருவையாற்றுத் திருத்தாண்டகப் பதிகத்தையும் காண்க.

IV. கலித்துறை

இது பண்டைக்காலத்திய கலிப்பா விலக்கணத்தில் துறை தாழிசை என வெடுக்கப்பட்ட இனங்களிற் சேர்ந்ததென்று சில புலவர்கள் கூறுவர். ஆயினும் கடைச்சங்கம் அழிந்த சில நூற்றாண்டுக்குப் பின்னர் ஒருவகைக் கட்டளையைப் பெற்ற ஐஞ்சீர் விருத்தங்கள் உண்டாயின. அதுவே விருத்தங்களில் முதலாய்த் தமிழில் பிறந்ததால், அதைத் திருவிருத்தமென்று* அக்காலத்திய தமிழர் அழைக்கலானார். அக்கட்டளையாவது, முதல் நான்கு சீர்களும் வெண்டளை பிறழாமல், ஐந்தாஞ்சீர் விளங்கா யாகி, அடியின் முதலசை நேரசையாயின் அவ் வடியிலுள்ள உயிரெழுத்துப் பதினாறாகவும், நிரையசை யாகின் பதினேழாகவும் வருவதாம்:—

முன்பின் முதல்வன் முனிவனெம்
  மேலை வினைகழித் தான்
அன்பின் நிலையி லவுணர்
  புரம்பொடி யானசெய்யும்
செம்பொனை நன்மலர் மேலவன்
  சேர்திரு வேதிகுடி
அன்பனை நம்மை யுடையனை
  நாமடைந் தாடுதுமே.

அப்பர்—திருவேதிகுடி திருவிருத்தம்—3.

இதைத் தற்காலத்தில் கட்டளைக் கலித்துறை யென்று கூறுவர். இத் திருவிருத்தம் அப்பர் அதிகமாய் விரும்பிக் கையாண்டதாகக் காணப்படுகின்றது. இது வெண்பாவுக்கு மிகவும் சம்பந்தப்பட்டு அவ்வோசைக்குப் பொருந்துதலால், அக்காலத் தமிழிலக்கணக் கலையிற் சிறந்த நமது சமயகுரவரும், இதை விரும்பிப் பல பதிகங்கள் இவ்வகை விருத்தங்களிற் பாடியது நாம் எதிர்பார்க்கக் கூடியதேயாம்.

கலித்துறையை, கட்டளைக் கலித்துறை யென்றும், கலிநிலைத்துறை யென்றும் இருவகையாய்க் கொள்வார். கலிநிலைத்துறையில் இரண்டே வகுப்புக்கள் உள்ளன. ஆக, கலித்துறை மொத்தம் மூன்று வகை. கட்டளைக்கலித்துறை நீங்க, சாதாரண கலித்துறை, அல்லது கலிநிலைத்துறை இருவகைகளின் இலக்கணம் பின்வருமாறு:—

(i) சிறிய மாச்சீரோடு கூவிளம், இரு விளச்சீர், மாச்சீர் அல்லது காய்ச்சீர், ஆகிய ஐந்து சீர்களாலாக்கப்பட்டது ஒருவகை:—

ஏயு மாறுபல் லுயிர்களுக் கெல்லையில் கருணை
தாய னூடனி யாயின தலைவரைத் தழுவப்
பாயு நான்மறை போற்றநின் றருந்தவம் புரியத்
தூய மாதவஞ் செய்தது தொண்டைநன் னாடு

பெரியபுராணம் - திருக்குறிப்புத்
தொண்ட நாயனார் புராணம் 1.

ஈற்றில் காய்ச்சீர் வருவதற்கு உதாரணம்:—

இரதி யின்னணம் வருந்திடத்
  தொன்மைபோ லெங்கோமான்
விரத மோனமோ டிருத்தலு
  முன்னரே விறற்காமன்
கருது முன்பொடி பட்டது
  கண்டனர் கலங்குற்றார்
சுருதி நன்றுணர் திசைமுகன்
  முதலிய சுரரெல்லாம்

கந்த புராணம்.

இத்தகைய கலிநிலைத்துறைகளுக்கு அப்பர் தேவாரத்தில் உதாரணம் காணப்படவில்லை.

(ii) இரண்டாவது வகையுள் இரண்டு உட்பிரிவுகள்உள. அவையாவன: (1) மாங்கனிச்சீரொன்றும், கூவிளச்சீர் இரண்டும் குறிய தேமாச்சீரொன்றும், தேமாச்சீர் மற்றொன்றும் ஆக வருவது. (2) மாச்சீர், புளிமாச்சீர், புளிமாங்கனிச்சீர், இரண்டு தேமாச்சீர்களாய் வருவது.

இவ்விரண்டும் உட்பிரிவுகளென வெடுத்ததற்குக் காரணம் இவைஒரேசாதியைச்சேர்ந்தவைகள்ஆவதாம். மாங்கனிச் சீருக்குப் பின்னே நிற்கும் சீரின் முதலெழுத்து ஒன்றை யடுத்தால் கூவிளமாய் முதல் உட்பிரிவில் கூறியவாறு அலகுபெறும். இன்றேல், இரண்டாஞ்சீர் முதலெழுத்து ஒற்றப் பெறுததால், இசையில் முதற்சீருடன் அணையப்பெற்று மாச்சீர், புளிமாச்சீர், புளிமாங்கனி யென முதன்மூன்று சீரும் அமையப் பின்னர் இரண்டுசீர்களும், முதல் உட்பிரிவிற் கண்டவாறு மாச்சீர்களாயும் நிற்கும். இவற்றிற்கு உதாரணம் காண்க.

1-வது உட்பிரிவிக்கு உதாரணம்

சீர்மன்னுசெல் வக்குடி மல்குசி றப்பி னோங்கும்
கார்மன்னுசென் னிக்கதிர் மாமணி மாட வைப்பு
நார்மன்னுசிந் தைப்பல நற்றுறை மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப்புகழ் பூண்டது பாண்டி நாடு

சேக்கிழார்—மூர்த்திநாயனார் புராணம் 1.

2-வது உட்பிரிவுக்கு உதாரணம்

சூழு மிதழ்பங் கயமாகவத் தோட்டின் மேலாள்
தாழ்வின் றியென்றும் தனிவாழ்வதத் தைய லொப்பார்
யாழும் மொழியிற் குழலின்னிசை யுஞ்சு ரும்பும்
வாழு நகர மதுராபுரி யென்ப தாகும்

பெரியபுராணம் - டை மூர்த்தி நாயனார் புராணம் 4.

இவ்விருத்தங்களாகியகலிநிலைத்துறைகளை நோக்குமிடத்து இவையும் ஒருவகைக் கட்டளை பெற்றனவாகவே காணப்படுகின்றன. அடிக்கு முதலசை நேரசையாயின் அவ்வடி பதினான்கு உயிர்கள் பெற்றனவாயும், நிரையாயின் பதினைந்து உயிர்களால் ஆக்கப்பட்டும் நிற்கும். இக் கலிநிலைத்துறைகள் அப்பர் தேவாரத்தில் காணப்படவில்லை.

ஆக, அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்கள் வழங்குவன இத்துணைவகை யென்பதுபோல், கலித்துறை வகைகளும் இவையேயென வரையறுத்துக் கா

* திருவிருத்தம் means The Viruttam, as the Book means the Bible from its root meaning.

ட்டினேம் ஆயினும்கலிவிருத்தங்கள் இத்துணைவகையென்று தமிழில் வற்புறுத்திக் கூறல் இயலாகாது. விருத்தப்பாவிய லாசிரியர்

"பண்ட மிழ்க்கவிப் பாக்க ளனைத்தையும்
கொண்டு கூறுதல் கூடுத லின்மையால்
வண்டு லாமது வார்குழல் வந்துழிக்
கண்டு கொள்வ தறிஞர் கடமையால்"

என்றனர். ஆகையால் தமிழ்இலக்கியத்தில் வழங்கும் கலிவிருத்தங்களின் முக்கியமானவற்றை மாத்திரம் இனிக் காண்போம்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

5-ம் பத்து, 9-ம் தசகம்

[670-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

காண்பதெஞ் ஞான்றுகொலோ வினையேன்
கனிவாய் மடவீர்
பாண்குரல் வண்டினொடு பசுந்தென்
றலுமாகி யெங்குஞ்
சேண்சினை யோங்குமரச் செழுங்கா
னற்றிரு வல்லவாழ்
மாண்குறள் கோலப்பிரான் மலர்த்தா
மரைப்பா தங்களே.

உரை:—கனிவாய் மடவீர்-பழுத்த பழம்போன்ற கீழ்உதடுகளையுடைய அழகுவாய்ந்த என் ஸஹிகளே, வினையேன்-பகவானைவிட்டுப் பிரியும்படியான பாவச்செயல்களைச் செய்த யான், பாண்குரல் வண்டினொடு-நற்சுருதியோடு கூடிய குரல்களையுடைய வண்டுகளும், தென்றலும் ஆகி - குளிர்ந்த தென்றெல்காற்று மாகி, எங்கும் சேண் சினை ஓங்கும் மரம் செழும் கானல் - எங்கும் ஆகாயம் அளாவிய கிளைகள் உயர்ந்த மரங்கள் அடர்ந்த செழுமையான சோலைகளையுடைய, திருவல்லவாழில், மாண் குறள் கோலப்பிரான்-பிரம்மச்சாரியின் வடிவமுடன் குள்ளமாய் வாமனவதாரமெடுத்த திவ்விய அவயவ ஸௌந்தரியத்தோடு கூடிய மஹாப் பிரபுவினுடைய, அரிய திருவடிமலர்களாகிய தாமரைப் புஷ்பங்களை, காண்பது எஞ்ஞான்று - என்றைக்குக் காணப்போகிறேனோ?

குறிப்பு:—"வினையேன்" என்று தன்னைச் சுட்டிச் சொல்லிச் "கனிவாய் மடவீர்" என்று ஸஹிகளை ஸம்போதிப்பதால் அவர்கள் தன்னைப்போலல்லாமல் உற்சாகத்தில் வர்த்திக்கிறதாகத் திருவுள்ளம்.

சென்றபாசுரத்தில், என்கண்கள் பகவானை என்று காண்பது என்றுசொல்லி வியஸநமடைந்தவர், வினையேனை நான் பகவானது தாமரைப் பாதங்களை எஞ்ஞான்று காண்பேன் என்று இங்கு அலற்றுகிறது— பெரிய பஞ்சத்தில் தன் பிள்ளைகளைக்காட்டி இவர்களுடைய பசியை யார் தீர்ப்பார்களோ என்று அழுத தாயானவள் பிறகு தன்பசியே தன்னை நலிவதைவாய்விட்டு அலற்றுவதுபோல் முதலில் தன் அவயவமான கண்களைப் பிரஸ்தாபித்துத் தன்னுடைய நலிவைப் பிறகு ஆர்த்தியால் கூறுகிறதாக ஆருயிரப்படி உரைகாரர்சுவாரஸியம் இங்குக் கூறுவது அறியத்தக்கது.

7-ம் பாசுரம்

பாதங்கண் மேலணி பூந்தொழக்
கூடுங்கொல் பாவைநல்லீர்
ஓதநெடுந் தடத்து ளுபர்தா
மரைசெங் கழுநீர்
மாதர்கள் வாண்முகமும் கண்ணு
மேந்துந்திரு வல்லவாழ்
நாதனிஞ் ஞாலமுண்ட நம்பிரான்
றன்னைநா டோறுமே.

உரை:—பாவை நல்லீர்-விசித்திரமாகச் செய்யப்பட்ட பொம்மையைப் போன்ற அழகான என் ஸஹிகளே, மாதர்கள் வாள்முகமும் கண்ணும்-அழகான பெண்களின் காந்தியுள்ள முகங்கள் போலும் அவர் கண்கள் போலும், ஓதம் - அலைகள் மோதுகின்ற, நெடுந்தடத்துள் - விசாலமான குளங்களின் தண்ணீரில், உயர்-உயர்ந்து வளருகின்ற, தாமரை செங்கழுநீர்-தாமரைப் புஷ்பங்கள் என்ன செங்கழுநீர்ப் பூக்கள் என்ன, ஏந்தும்-மாதர் முகங்கள் கண்கள் இவைகளினழகை வகிக்காநின்ற, திருவல்லவாழில், நாதன் -உலகப்பிரான், இஞ்ஞாலம் உண்ட - பிரளயகாலத்தில் தன் வயிற்றில் உலகத்தைவைத்து ரக்ஷித்த, நம்பிரான் தன்னை-நம்மை ஆட்கொண்ட பிரபுவை, பாதங்கள்மேல் - திருப்பாதங்களின்மேல், நாடோறும் - தினம் தப்பாமல், பூ அணிந்து தொழக் கூடுங்கொல்-பூவால் அலங்கரித்துத் தொழ நாம் பாக்கியம் பெறுவோமோ?

குறிப்பு:-இப்பாசுரத்தில், தினம் தவறு இல்லாமல் பூக்களால்பூஜித்துப் பகவானைத்தொழ நமக்குப் பாக்கியமுண்டாகுமோ என்று பிராட்டி தன் ஸஹிகளைக் கேட்கிறாள்.

8-ம் பாசுரம்

நாடொறும் வீடின்றி யேதொழக்
கூடுங்கொல் நன்னுதலீர்
ஆடுறுதீங் கரும்பும் விளைசெந்
நெலுமாகி யெங்கு
மாடுறு பூந்தடஞ்சேர் வயல்சூழ்
தண்டிரு வல்லவாழ்
நீடுறை கின்றபிரா னிலந்தா
வியநீள் கழலே.

பதக்குறிப்புக்கள்:-நன்னுதலீர்-அழகான முகவிலாசத்தையுடைய என் ஸஹிகளே, ஆடுறு தீங்கரும்பு-சர்க்கரை ஆடக்கூடிய ரஸ்தாளிக் கரும்பு, மாடுறு - சுற்றியிருக்கிற-எல்லாப் பக்கங்களிலும் கவர்ந்துகொண்டிருக்கிற, நீள்கழலே - பக்தர்களிருக்குமிடம்தேடி வரும் திருப்பாதங்கள்.

பொழிப்புரை:—நல்ல ஸஹிகளே! எப்போதும் விளைவு நிறைந்த பூத்த பொய்கைகளோடு சேர்ந்த வயல் சூழ்ந்து குளிர்ச்சியாயிருக்கிற திருவல்லவாழிலே அநுக்கிரஹசீலனைக்கொண்டு நிரந்தரவாஸம் பண்ணுகிறவனுடைய குணகுண நிரூபணம் செய்யாமல் ஸ்வீகரிக்கக் கூடியதாய் ஆச்ரிதர் இருந்தவிடத்திலேயே

செல்லும் திருவடிகளை ஸர்வ காலமும் இடைவீடின்றித் தொழக்கூட வாய்க்குமோ?

9-ம் பாசுரம்

கழல்வளை பூரிப்ப யாங்கண்டு
கைதொழக் கூடுங்கொலோ
குழலென்ன யாழு மென்னகுளிர்
சோலையுட் டேனருந்தி
மழலை வரிவண் டுகளிசை
பாடுந்திரு வல்லவாழ்
சுழலின் மலிசக் கரப்பெரு
மானது தொல்லருளே.

பொழிப்புரை:—குளிர்ந்த சோலைகளிலே புகுந்து மதுபானத்தைப்பண்ணிப் புல்லாங்குழலோசையோ, வீணைமீட்டலோவென்றுசந்தேஹிக்கும்படி-இசைபாடுகின்ற கண்ணுக்கழகியவான வண்டுகள் ஆரவாரம் செய்கின்ற திருவல்லவாழிலே, பகைவரைத் தேடித் துரத்தித்திரிந்து சுழலும் சக்கராயுதத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற சர்வேசுவரனை நம்முடைய கைகள் தற்பொழுது கழலும் வளைகள் அப்படிக்கன்றியில் பூரணமாய்க் கைகளில் நிரம்ப உற்சாகத்துடன் தொழலாம்படி யவனருள் நமக்குக் கூடுமோ வென்கிறாள்.

10-ம் பாசுரம்

தொல்லருள் நல்வினையாற் சொல்லக்
கூடுங்கொல் தோழிமீர்காள்
தொல்லருண் மண்ணும் விண்ணும்
தொழநின்ற திருநகரம்
நல்லரு ளாயிர வர்நல
னேந்துந் திரு வல்லவாழ்
நல்லரு ணம்பெரு மான்நாரா
யணனு மங்களே.

தோழிமீர்காள்! தன்னுடைய ஸ்வரூபத்துக்குப் பொருந்தியதான பரிபூர்ணமான அருளை எப்போழ்தும் அநுபவித்துக்கொண்டிருக்கும் இப்பூமியில் உள்ள பக்தர்களும் விண்ணிலுள்ளவர்களும் நிறைந்து வந்து ஸேவித்துக்கொண்டிருக்கின்ற திருவல்லவாழிலே நின்றருளியிருக்கிற நமக்கு ஸ்வாமியான நாராயணனுடைய திருநாமங்களை அவனைக்கண்டபின் அவனின் நல்ல வருளாலே பரமப் பிரீதியோடு சொல்லுகைக்கு நமக்குக் கிடைக்குமோ?

குறிப்பு:—இப்பிராட்டி, தன்னை எம்பெருமான் பிரிந்திருப்பதாலே தன்னைத் தற்காலம் நிக்கிரஹம்செய்துவிட்டானாகநினைத்து, அன்னவனைவிட அவனுடைய பக்தர்கள் ஒருபொழுதும் நிக்கரஹம் என்பது கலவாதே அநுக்கிரஹமே செய்பவர்களென்று "நல்லருள் ஆயிரவர்" என்று ஸ்துதித்துப் பேசுகிறாள்-ஆனாலும் அவனது ஸஹஜமான பரிபூர்ணமான கிருபையாகிய "தொல்லருளை" மண்ணுளாரும் விண்ணவர்களும் துதித்துத் தொழுகிறார்களென்று இரண்டாவது அடியில் கூறுகிறாளென் றறியவும்.

11-ம் பாசுரம்

நாமங்க ளாயிர முடைய
நம்பெருமா னடிமேற்
சேமம்கொ டென்குரு கூர்ச்சட
கோபன் றெரிந்துரைத்த
நாமங்க ளாயிரத் துள்ளிவை
பத்துந்திரு வல்லவாழ்
சேமங்கொள் தென்னகர்மேற் செப்புவார்
சிறந்தார் பிறந்தே.

பொழிப்புரை :—நாமங்களாயிரத்தையு முடையவனாய்ச்சர்வேசுவரன் ஆனபடியாலே பிரசித்தனை திருவடிகளே தமக்கு உசிதமான ரக்ஷையென்று ஆழ்வார் ஆராய்ந் தருளிச்செய்த அவனின் ஆயிரநாமங்களைப் போலக் குணசேஷ்டாதிகளுக்குப் பொருத்தமான ஆயிரத்திலும் இத் திருவாய்மொழியைத் திருவல்லவாழாகின்ற ரக்ஷையை யுடைத்தான தென்னகரிலே கூட்டிச் சொல்லவல்லார் ஸம்ஸாரத்திலே யிருந்துகொண்டே யெல்லாரிலும் சிறந்தவராகுவார்.

குறிப்பு:—நாராயணன் ஒருவனுக்கே ஆயிரம் நாமங்கள் உரியதாகுமென்று விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் "ஸஹஸ்ர நாம்நே புருஷாய சாஸ்வதே" என்றுவியாஸபகவான் அறுதியிட்டிருக்கிறதை"நாமங்கள் ஆயிர முடையான்" என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார்.

இத்தசகத்தில், திருவல்லவாழ் க்ஷேத்திரத்தினருகில் ஆழ்வார் வந்து தங்கியதாகத் தெரிகிறதே தவிர அம்பலத்தில் பிரவேசித்ததாகக் காணவில்லை. இந்தத் திவ்விய தேசத்தை அணுகப் போவோமென்ற ஆர்த்தியே பகவானின் விரஹத்தைச்சமனம்செய்யுமென்பது திருவுள்ளம் போலும்.

அமீல்

[668-வது பக்கத் தொடர்ச்சி]

ஜீவத்தோற்றமானது புகைச்செறிவின் (Smoke-Wreath)சாயையை ஒத்தது; வெட்டவெளியில்நடிக்கும்ஓர் அபிநயம் போன்றது;மணல்மீது இவ்விநாடி வரையப்பட்டு அடுத்த விநாடி காற்றினு லழிக்கப்படும் சித்திரம்போலும்; வாழ்க்கையாகிய நதியில் உருண்டு பெருத்து உடைந்து மறையும் காற்றுக்குக் குமிழியை ஒக்கும் (Air - bubble). சுருங்கச்சொல்லின்-ஓர் கேவலத்தோற்றம் - ஓர் மாயம் - ஓர் அபாவம் போலும்!எனினும்,இம்மாயந்தான் அகண்ட அகாதச்சத்தின் அறிகுறியாவது; தோன்றிப் புடைத்து விரிந்து அழியும் குமிழியானது உலகப்போக்கின் ஓர் சாரசங்கிரகமாகின்றது என்னலாம்.

கர்மம் சிந்தனை சொற்கள் ஆயவைகளினுல் ஜீவனின் சிறப்பு வெளியாகின்றது. இயந்திரத்தின் சக்கிரம் போல்,சாமானியர் பற்பல கர்மங்களைஏற்றுச்செய்து உலகினர்க்கு உதவுகின்றனர்; தம் புத்திவளப்பத்தினுல் அறிஞர் ஹிதோபதேசங்களாலும் நூல்கள் மூலமாகவும் உபகரிக்கின்றனர்; இவர்களுக்கும் மேலாகவும் மிக்க பேருபகாரியாகவும் விளங்குபவன் ஞானியாம் (sage). வாழ்க்கையுலகைக் கடந்துசெல்லும் பேதைப் பிரயாணிகளுக்குத் தைரியமூட்டி மேலெழவும் முன்போகவும் உதவுபவர் மெய் வித்தகராவர். மாய வொளிபோல் (Will-o'-the-wisps) நாம் மறைவோ மாயினும், நம்முடைய சுவடுகளை (foot-prints) விட்டுப் போகலாம்; விண்வீழ் கொள்ளிகள்

(meteors) போன்றவரானாலும், இலக்கியங்கள் மூலமாக வாழ்க்கை அநுபவங்களையும் வாணாளின் பயனையும், ஆதர்சங்களையும் பிறர் இதயத்தில் பதித்து நீண்டகாலம் வாழலாம்.

ஒவ்வொன்றும் மறைவதே யல்லாமல் அழிவதில்லை. நாகரிகம் எத்தன்மையதெனின்—பற்பல ஆயிரவருடங்கள் வரையிலும், கோடிக் கணக்காக ஜீவித்து மரித்த சிறு ஜந்துக்களின் தேகங்களும், தம்முடைய ஜீவகாலத்தில் அவைகள் கொணர்ந்து குவித்த சாமான்களும், நாளாவர்த்தியில், சேர்ந்து கெட்டிப்பட்டுச் சுண்ண மலையாக (Calcareous mountain) விளங்குதல் போல், நமக்குமுன் பாடுபட்டுச் சென்றவர்கள் தம் கர்மபலன்கள் திரண்ட கோபுரம் போன்றது.

ஒரு சிறு மூலையிலிருந்தன்று, மற்று, ஒளி மிகுந்த பேருலகத்தினின்றும், புத்தகசாலைகளில் இருந்தன்று, மற்று, சிந்தனைப் பிரபஞ்சத்தினின்றும், சிற்சில நண்பர்கள் மூலமாகவன்று, மற்று, மாந்தரனைவருடனும் கூடிப்பழகுவதினின்றுமே தான் புரைதீர்ந்த ஞானம் உண்டாகக்கூடும் போலும்.

காலம் ஓர் பெரிய மாயையாகும்; காலத்திற்கு அதீதமானதை ஜீவனெனவும் ஜீவத் தோற்றங்களெனவும், காரணமெனவும் காரிய மெனவும், கர்மமெனவும் பலனெனவும் பிரித்து முன்பின்னாகப் பார்த்து அறியச் செய்யும் உட்கருவி, அல்லது பிரகாரம் போலும். இது மனதின் வேலையாகும். நம்முன் உள்ள ஒரு கோணஉருவத்தை முற்றிலும் உடனே அறிதற்கியல்வதில்லை; அதனை முழுதும் திருப்பிப் பார்க்க வேண்டும், அல்லது அக் கோளத்தை நாம் சுற்றிவர வேண்டும். முதல்உபாயத்தின்படி உலகம் காலத்தின் மூலமாக விரிவதாகும்; இரண்டா முபாயத்தின்படி உலகை நம்முடைய மனமானது ஆராய்ந்து வகுத்துத்தொகுத்துக் கிரமப்படி அறிவதாகும். அகண்ட வஸ்துவானது கண்டித ஜீவன்களான நம்முன் கால இடங்கள் வாயிலாகத் தோன்றுகின்றது. மேலும், அவைகள் மூலமாகத் தான் சிருஷ்டிப் பொருள்கள் முறைப்படி இயங்கி மேலேறி மூலவஸ்துவை அடைகின்றன.

குருட்டுத் தன்மையினாலோ, அல்லது வெறியினாலோ, பெருமிதத்தினாலோ அல்லது மெய்ப் பக்தியினாலோ, கழிந்த குற்றங்களை நினைத்து அநுதபித்தலினாலோ, அல்லது மேற்சம்பவிக்கும் கொடூரங்களுக்கு அஞ்சியோ, தார்ப்பலத்தினாலோ அல்லது செருக்கினாலோ, இன்பத்தினிமித்தமோ அல்லது தண்டனைகளினின்றும் வலிவருத்தங்களி னின்றும் பிழைத்தற்கோ, இன்னு மிவைபோன்ற ஏனைய காரணங்களையிட்டு ஆன்மாக்கள் தெய்வபக்தியுடையவர்களாகத் தோன்றுகின்றனர். மற்று, தெய்வத்தின்நிமித்தமே தான் தெய்வபக்தி நிரம்பிவிளங்குதல் சிறந்ததாகும்.

தேகபலமும் மனச்சீருமேதான் ஆரோக்கியம் என்பது; இவ் வாரோக்கியநிலையே சுதந்திரமென்பதாம்; இச் சுதந்திரத்தினின்றுதான் ஆனந்தம் ததும்புகின்றது. ஆனந்தத்திற்கு ஆதாரமாவதும், ஒழுங்கு அல்லது இணக்கத்திற்குப் பக்கபல மாவதும், சக்தியின் பெருக்கமேயாம். தேக சக்தியும், மனோ சக்தியும், அருட்சக்தியும் பரிணமிக்கப்பெற்றவன் துயருறான். சாதாரண உலோகங்களை ஒளிபெறச்செய்து, அவ்வொளியின் நிறத்தினால் தன் சக்தியியக்கக் கதியை அறிவுறுத்தும் மின்சாரம்போல், மேற்சொல்லியமுச் சக்திகளும் தம்மைக் குடிகொள்ளப்பெற்றவன்மிக்க எளியனானாலும் அவனை உயர்த்தித் தம் வன்மையையும் தன்மையையும் பலவிதங்களில் அவனுடைய குண நடத்தைகள் மூலமாக விளக்குகின்றன.

வீண்சொற்களும் செயல்களும் ஆன்ம ஒளியை மழுக்குவனவாம். உட்சக்தியைக் கெடுப்பனவாம். உணர்ச்சிகளின் ஒற்றுமையையும் வலிமையையும் இழித்துக் குலைப்பன எவையெனின், இடைவிடாத ஆராய்ச்சிமுறையும், வீண்சொற் பிரயோகமுமாம்.

ஞானம்நிரம்பி, உள்ளம்பொங்கி, ஆனந்தம் ததும்புகையில், சாந்தகுணம் மேம்பட்டுச் சமாதிநிலையில் ஆழ்கின்றோம்.

தோன்றி ஜ்வலித்து மழுங்கி மறைதலும், பிறந்து வளர்ந்து பட்டுத் தேய்ந்து மடிதலுந்தான் புழுமுதல் மனிதனீறாகவும், மணல்முதல் நக்ஷத்திரங்களீறாகவும் யாவற்றிற்கும் பொதுவான நிகழ்ச்சிகள் போலும்.

வாழ்க்கை என்பது ஓர் நிழலைப் பற்றிய கனவை நிகர்க்கும்.

நனவுகளுக்கும் கனவுகளுக்கும் உள்ள இடைவெளியே காலமாகும்; இவ் விடைவெளியின் இணக்கத்தை அறிந்தவுடன் காலமாகிய மாயை மாயமாகின்றது.

யாதொரு உயரிய சிந்தனையும் நோக்கமும் சிரத்தையுமின்றி உஜ்ஜீவிப்பவன் நீரோட்டப்படி ஆற்றில் மிதந்து ஓடுகின்ற நாணலைவிடச் சிறந்தவனல்லன்; அத்தகையன் ஜீவான்மாவல்ல, ஆனால் இயக்கிச் செலுத்தப்படும் ஜடப்பொருட்களி லொன்றாவன்; ஓர் தொனியல்ல, பிரதியொலியை யொத்தவன்; விஷயாதிகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் கர்த்தா அல்லன், மற்று, அடிமையானவன்; காற்றடிக்குந் திசையை நோக்கிச் சுழலும் காற்றாடி போன்றவன்.

கலித்தொகை

[671-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 26

தலைவன் இளவேனிற் காலத்தில் வந்துவிடுவதாகத் தலைவிக்குக் கூறிப் பிரிந்தான். அக்கால வரவின் கண் அவன் வரவில்லை. ஆதலின் அவள் பெரிதும் வருந்தித் தோழியை நோக்கி, "நங்காய், நம் காதலர் நம்மை மறப்பினும் மறக்க, இக்காலத்தில் இவ்வூரின் கண் தாம் விளையாடும் விளையாட்டையும் மறந்தாரோ!" எனக் கூறினாள். பின்னர்த் தோழி தலைவன் வரவுணர்ந்து அதனை அவளுக்குக் கூறியதைக் கூறுவது இச் செய்யுள்.

ஈதலிற் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போற் றீங்கரை மரநந்தப்
பேதுறு மடமொழிப் பிணையெழின் மானோக்கின்
மாதரார் முறுவல்போன் மணமௌவன் முகையூழ்ப்பக்
காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போற் கழல்குபு
தாதொடுந் தளிரொடுந் தண்ணற நகைபெறப்

பேதையோன் வினைவாங்கப் பீடிலா வரசனாட்
டேதிலான் படைபோல விறுத்தந்த திளவேனில்

நிலம்பூத்த மரமிசை நிமிர்பாலுங் குயிலெள்ள
நலம்பூத்த நிறஞ்சாய நம்மையோ மறந்தைக்க
கலம்பூத்த வணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்பானாக் கூடலு முள்ளார்கொல்

கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னாதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும் [பார்கொல்

"மையெழின் மலருண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினாற் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க
தைஇய மகளிர்தம் மாயமோ டமர்ந்தாடும்
வையைவா ருயரெக்கர் நுகர்ச்சியு முள்ளார்கொல்

எனவாங்கு

நோய்மலி நெஞ்சமோ டினைய றோழி
நாமில்லாப் புலம்பாயி னடுக்கஞ்செய் பொழுதாயிற்
காமவேள் விழவாயிற் கலங்குவள் பெரிதென
வேமுறு கடுந்திண்டேர் கடவி
நாமமர் காதலர் துணைதந்தார் விரைந்தே

(தரவு)

(வரி. 1 - 8) ஈதலில் குறை காட்டாது - கொடுத்தல் தொழிலிலே பொருட் குறைவைக் காட்டாமல், அறன் அறிந்து ஒழுகிய - இல்லறம் நடத்தும் முறைமையை அறிந்து நடந்த, தீது இலான் செல்வம் போல் - தீவினை இல்லாதவனுடைய செல்வம் அதிகப்படுமாறு போல, தீம் கரை மரம் நந்த - இனிய (நீரையுடைய) ஆற்றங் கரையிலே மரங்கள் தழைக்கவும், பேதுஉறு - கேட்போர் மயக்கம் உறுதற்குக் காரணமான, மடம் மொழி - மெல்லிய மொழியினையும், பிணை எழில் மான் நோக்கின் - பெண்மானது அழகையுடைய நோக்கம்போலும் நோக்கினையுமுடைய, மாதரார் முறுவல் போல் - பெண்களுடைய பற்களைப் போல, மணம் மௌவல் முகை ஊழ்ப்ப - மணத்தையுடைய காட்டுமல்லிகையின் அரும்பு மலரவும், காதலர் புணர்ந்தவர் - தமது காதலரைக் கூடினவருடைய, கதுப்பு போல் - கூந்தல் போல, கழல்குபு - விரிந்து, தாதொடும் தளிரொடும் - மகரந்தப் பொடிகளாலும் தளிர்களாலும், தண் அறல் - குளிர்ச்சியை யுடைய (அலைஅலைத்து உற்ற நுண் கரு) மணல், தகை பெற - அழகு பெறவும், பேதையோன் வினை வாங்க - அறிவில்லாத அமைச்சன் அரசாங்கத் தொழிலை மேற்கொள்ள, பீடு இலா அரசன் நாட்டு - (அதனால்) வலிமையற்ற அரசன் நாட்டில், ஏதிலான் படைபோல - பகையரசன் சேனை வந்து தங்குமாறுபோல, இளவேனில் இறுத்தந்தது - இளவேனில் வந்து தங்கிற்று.

"பிணை எழில் மான்நோக்கின்' என்பதனை 'மான் பிணை எழில் நோக்கின்" என மாற்றுக.

நந்த, ஊழ்ப்ப, தகைபெற இளவேனில் இறுத்தந்தது என முடிக்க.

(தாழிசை)

(வரி. 9 - 12) நிலம் பூத்த மரம் மிசை - நிலம் அழகு பெறுதற்குக் காரணமாகிய மரங்களின் மேலிருந்து, நிமிர்பு ஆலும் - நிமிர்ந்து கூவும், குயில் எள்ள - குயில்கள் நம்மை இகழவும், நலம் பூத்த - நன்மை விளங்குகின்ற, நிறம் சாய - நமது நிறம் கெடவும், நம்மையோ மறந்தைக்க - நம்மையோ அவர் மறப்பினும் மறக்க, கலம் பூத்த - ஆபரணங்கள் பொலிவு பெற்ற, அணியவர் - அழகினையுடையவராகிய பரத்தையருடைய, காரிகை மகிழ் செய்ய - அழகு (தம் மனத்திற்கு) மகிழ்ச்சியைச் செய்தலினாலே, புலம் பூத்து - தம் அறிவு பொலிவு பெற்று, புகழ்பு ஆனா - அதனால் பிறர் புகழ்தல் நீங்காத, கூடலும் உள்ளார் கொல் - மதுரையையும் அவர் நினையாரோ!

'மறக்க' என்னும் வியங்கோள் 'மறந்தைக்க' என்னும் திரிசொல்லாயிற்று.

(வரி. 13 - 16) கல்மிசை மயில் ஆல - (நம் சாயல் கெட்டமைகண்டு) மலைமேலே மயில் ஆரவாரித்து ஆடவும், கறங்கி ஊர் அலர் தூற்ற - ஆரவாரித்து ஊரிலுள்ளார் பழியைப் பரப்பவும், தொல் நலம் நனி சாய - நமது பழைய அழகு மிகக் கெடவும், நம்மையோ மறந்தைக்க - நம்மையோ அவர் மறப்பினும் மறக்க, ஒன்னாதார் - பகைவரை, கடந்து அடூஉம் - நேர் நின்று (போர் செய்து) அழிக்கும், உரவு நீர் - கடலிலே பொருந்திய, மா கொன்ற - (சூரவன்மா ஆகிய) மா மரத்தை அழித்த, வென்வேலான் குன்றின்மேல் - வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடைய முருகனுடைய திருப்பரங் குன்றின்மேல், விளையாட்டும் விரும்பார் கொல் - பரத்தையருடன் விளையாடும் விளையாட்டையும் அவர் விரும்பாரோ!

(வரி 17-20) மை எழில் மலர் உண்கண் - கரிய அழகினையுடைய நீலமலர் போலும் மையுண்ட நமது கண்கள், மகிழ்கொள்ள - மகிழ்ச்சிகொள்ளும்படி, மருவூட்டி - மருவூட்டுதலைச் செய்து, பொய்யினால் புரிவுண்ட - (தாம் செய்த பொய்யாலே நம்மனம் தம்மிடத்தில்) விருப்பங் கொள்ளும்படி செய்த, நம்மையோ மறந்தைக்க - (தாம் விரும்பாத) நம்மையோ அவர் (மறப்பினும்) மறக்க, தைஇய மகளிர்தம் ஆயமோடு - கோலம் செய்தலையுடைய பரத்தையர் கூட்டத்தோடு, அமர்ந்து ஆடும் - விரும்பி ஆடும், வையை - வையையாற்றிலே, வார் உயர் எக்கர் - நீண்ட உயர்ந்த மணல் திட்டிலே, நுகர்ச்சியும் உள்ளார் கொல் - (தாம் பரத்தையரோடு கொள்ளும்) இன்ப நுகர்ச்சியையும் அவர் நினையாரோ!

மருவூட்டல் - நாவின் முனையால் கண்ணிமைகளைமெல்லத் தடவல்.

(தனிச்சொல்)

என - என்று கூறி.

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி. 22-26) தோழி - தோழியே, நோய் மலி நெஞ்சமோடு இனையல் - நோய் மிக்க மனத்தோடு வருந்தாதே; நாம் இல்லா புலம்பு ஆயின் -(இது) நாம் இல்லாத தனிமைக் காலமாதலானும், நடுக்கம் செய் பொழுதாயின் - (இது பிரிந்தார்க்கு) நடுக்கத்தைச் செய்கின்ற இளவேனிற் காலமாதலானும், காம வேள் விழவாயின் - இது) மன்மதன் செய்யும் திருவிழாக் காலமாதலானும், பெரிது கலங்குவள் என - நம் தலைவி பெரிதும் கலங்குவாள் என்று உணர்ந்து, வேம் உறு - (பகைவர்) கலக்கம் உறுதற்குக் காரணமான, கடுந்திண் தேர் விரைந்து கடவி - கடிய வலிய தேரை விரைந்து செலுத்தி, நாம் அமர் காதலர் - நாம் விரும்பும் அன்பர், துணை தந்தார் - தாம் துணையாம் தன்மையை நமக்குக் கொடுத்தார்!

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 4. களம் 1.

[672-ம் பக்கத் தொடர்ச்சி]

ப்ராஸ்ப்பீரோ:—(ஒரு புறமாய்) அந்தக் காட்டுமிருகம் காலிபனும் அவன் கூட்டாளிகளும் என் உயிரிற்கு விரோதமாகச் செய்யுமந்தச் சதிச் சூழ்ச்சியை மறந்தேன் (1). அவர் செயல்சூழ்ந்த நிமிடமும் இதோ வந்துவிட்டது (2)—[ஆவிகளைப் பார்த்து] நன்று செய்தீர், போய்விடுங்கள், போதும் (3).

பர்டினண்ட்:—இது அதிசயம். வலிய உழக்குமோர் மனோவிகாரம் உற்றுளர் உன் தந்தை (4).

மிராண்டா:—இத்துணை உக்கிரமான கோபம் பற்ற அவரை நான் இன்றளவும் ஒருபோதும் பார்த்ததில்லை (5).

ப்ராஸ்ப்பீரோ:—மைந்த, தெருமரல் எய்தினை யென்ன ஏதோ சஞ்சலப் படுவாய்போல் தோன்றுகின்றாய் (6). மனமுவந்திடுக ஐய. நமது களியாட்டங்கள் இப்பொழுதுமுடிவடைந்துவிட்டன. நமதுநடிகர் இவை, முன்னர் யான் உனக்கு உரைத்தபடி, எல்லாம் ஆவிகள்; காற்றினுள், மெல்லிய காற்றினுள் உருகிவிட்டன. அன்றியும், அடித்தளமற்ற இக் காட்சியின் கட்டிடமேபோல், முகில் முடித்த கோபுரங்களும் அலங்கார அரண்மனைகளும் திப்பிய ஆலயங்களும், பெரிய இக் குவலயந்தானும், அதன் உடைமையாய அனைத்துமே, வாடி மறைந்த இப் பதார்த்தமற்ற கோலக்கூத்தேபோல், பின் ஒரு படலமும் விட்டுவைக்காமல் கரைந்து தீர்ந்துவிடும் (7). கனவுகளைச் செய்கின்ற அப் பொருளினால் ஆனவர்கள் நாம் (8). நமது சின்னாள் வாழ்க்கை ஒரு துயிலோடு சுருண்டுவிடுகின்றது (9)—ஐய, யான் அல்லலுற்றிருக்கின்றேன்; என் தளர்ச்சியைப் பொறுத்திடுக; முதிய என் மூளை கலங்கியுளது. என்னுடைய நொய்ம்மையின்பொருட்டு நீ கவலவேண்டா. விருப்பமுண்டாயின், எனது குகையினுட் சென்று அமர்வாய். மோதுகின்ற என் மனத்தினைத் தணிப்பதற்கு ஒன்றிரண்டடிகள் யான் உலவி வருகின்றேன்.

பர்டினண்ட், மிராண்டா:—உனது சாந்தியைக் கோருகின்றோம்.

[போகின்றனர்]

ப்ராஸ்ப்பீரோ:—என் நினைவினிற் கடுகி வா! வந்தனம் உனக்கு, ஏரியல்! வா.

[ஏரியல் வருகின்றது]

ஏரியல்:—நின்றன் நினைவுகளை யான் பிளந்து புகுகின்றேன். நின் சித்தம் யாது? (10).

ப்ராஸ்ப்பீரோ:—ஆவியே, காலிபனை எதிர்ப்பதற்கு நாம் ஆயத்த மாகவேண்டும்.

ஏரியல்:—ஆம், என் தலைவ, ஸீரீஸ்ஸாக நான் நடித்தபோது இதனை நினக்குச் சொல்ல எண்ணினேன். எனினும், உன்னைச் சீற்றமுறச் செய்வெனோ வென அஞ்சினேன்.

ப்ராஸ்ப்பீரோ:—மீண்டுஞ் சொல், அந்தக் கயவர்களை எங்கு விட்டனை?

(1) காலிபனின் தியதூண்டலுக்கு உடன்பட்டு ஸ்ட்டிபானோ ப்ராஸ்ப்பீரோவைக் கொன்று அந்தத் தீவினைக் கொள்ள நிச்சயித்துப் புறப்பட்டுவரும்செய்தியை ஏரியல் ப்ராஸ்ப்பீரோவினிடம் சொல்லியிருக்கின்றது. ப்ராஸ்ப்பீரோ இந்த இடைக்கூத்தினிடையே அதனை மறந்திருந்து இப்பொழுது நினைவுகொள்கின்றான்.

(2) புறப்பட்டவர் இங்கு வந்துசேரக்கூடிய வேளையும் நெருங்கிவிட்டது—என்பது பொருள்.

(3) ஆவிகளை நோக்கி, நன்றாக நடித்தீர் என்று உபசாரம் பாராட்டி அவைகளைப் போகும்படி ப்ராஸ்ப்பீரோ அகற்றிவிடுகின்றான்.

(4,5) ப்ராஸ்ப்பீரோவின் கலங்கிய நிலைகண்டு பர்டினண்டும் மிராண்டாவும் இவ்வாறு வியக்கின்றனர். ப்ராஸ்ப்பீரோவின் சஞ்சலமுடைய சினத்திற்கு இப்பொழுது காரணமாயிருக்கக் கூடியவை இரண்டு:-(1) காலிபனுக்குத் தான் நன்மைசெய்ய முயன்றதெல்லாம் வீணாயிற்றென்பதை அவன் கொடுஞ் சதி செய்யவருவது காட்டுகின்றது. அந்தச் சதிக்குத் தான் ஆளவானோ என்ற அச்சம் ஒன்றும் ப்ராஸ்ப்பீரோவிற்கு இல்லை. ஆயினும், அப் பாதகன்பால் தன் நல்லெண்ணங்கள் ஒன்றும் பயன்படாமற் போயிற்றேஎன்பதை எண்ணிவெகுளியோடு மிகக்கவலவும் கவல்கின்றான். (2) மனித வாழ்க்கையைப்பற்றிய சில சிந்தனைகள் இப்பொழுது இவனது மனத்தில் எழுகின்றன. அதனிடையே தன்னுடைய வாழ்க்கையையும், தனக்குப் பிறர்செய்த தீங்குகளையும் நினைத்துக்கொள்கின்றான். நல்லறிவும் நற்குணமும் பெருந்தன்மையும்உடைய ப்ராஸ்ப்பீரோ, அத்தீங்குகளால் தான் பட்ட வருத்தங்களைக் கருதி அதற்கு இப்பொழுது பழிதீர்க்க வேண்டுமென்று வெகுள்கின்றானென மதிக்கலாகாது. தன்னைப் போன்ற மனிதர் ஏனோ இப்படிப் பிறர்க்குப் பொல்லாங்கு செய்ய நினைக்கும் புல்லிய குணத்தினராய் இழிதல் வேண்டும் என்னும் துயரமே இவன் கொண்ட சினத்தில் பெரும்பாகம் கலந்திருக்கும்.

(6) தெருமரல் - பயத்துடன் கூடிய மனக்கலக்கம்.

(7) ஆவிகள் மறைந்து போனதை, காற்றினுள் உருகிவிட்டதாகக் கூறுகின்றான். களியாட்டம் - ப்ராஸ்ப்பீரோ நடத்திக்காட்டிய வேஷக்கூத்து. காட்சியின் கட்டிடம்- இப்பொழுது நடந்த கூத்தின் அமைப்பு தோற்றம் முதலியன ஓர் கட்டிடமாக உருவகம் செய்யப்படுகின்றது. அடித்தளம் - அஸ்திவாரம். இக்கூத்து ஓர் மாயத் தோற்றமும், அதனை நடித்த ஆவிகள் ஸ்தூலசரீர மில்லாதவைகளும் ஆவதால், இக் காட்சிக்கட்டிடம் அடித்தளம் அற்றது என்கின்றான். பதார்த்தமற்ற கோலக்கூத்து என்றுஇதனைப் பின்னர் அழைப்பதன்கருத்தும்இது தான். இந்தப் பதார்த்தமற்ற கோலக்கூத்து எப்படி உண்மை போல் தோன்றி பிறகு ஒன்றுமில்லாமல் நம் கண்முன்னே வாடி மறைந்து தீர்ந்ததோ, அப்படியே இவ்வுலகமும், இவ்வுலகத்திலுள்ள அரண்மனைகள் ஆலயங்கள் அடங்க அனைத்தும் அடியோடு கரைந்து தீர்ந்துவிடும். அப்படித் தீர்ந்தபின் இவ்வுலகம் இருந்ததற்கடையாளமாக ஒரு 'படலம்' கூட எஞ்சி நிற்காது. படலம் என்பது இங்குப் புகைப்படலத்தைக் குறிக்கின்றது. ஆகாயவாணங்கள் எரிந்து தீர்ந்தபின் ஒரு புகைப்படலமாவது எஞ்சிக் காணப்படுகின்றது; இவ்வுலகம் மறைந்தபின் அதன் புகைகூடக் காணப்படாது என்பது பொருள். குவலயம் = பூமி.

8. நாமோ என்னில், நாமும் நிலையுள்ள பொருள்களால் செய்யப்பட்டிருப்பவர்களல்லர். கனவிலே காணப்

ஏரியல்:—ஐய, குடித்துக் குடித்து அவர் சிவக்கப் பழுத்திருந்தனர் என்று உனக்குக் கூறினேன். தம் முகத்தினில் உயிர்த்ததென்று காற்றினை அறையுமளவு அவர் வீரம் நிறைந்திருந்தனர். கால்களிற் பட்டதற்குத் தரையினை அடித்தனர். எனினும், தம் கருமத்தின்பால் என்றுந் தம் கருத்தைச் செலுத்தினர் (11). பிறகு, என் கைச் சிறு பறையைக் கொட்டினேன். அதன்மேல், முதுகு பழகாத குதிரைக்குட்டிகளைப் போல், அவர், இசையை முகர்ந்துணரப் புகுந்தாரென்ன, தத்தம் காதுகளை நெறித்து இமைகளைநிமிர்த்தி மூக்கினைத் தூக்கினர் (12). அவ்வளவு நான் அவர் செவிகளை வசீகரித்துவிட்டேன்; அதனால், யான் கூவ அவர், கன்றுகளைப்போல், பல்லுடைப் புதரும் கூரிய நெரிஞ்சிலும் தைக்கும் முள்ளியும் முட்களும், தளர்ந்துவளும் தம் கால்களில் ஏற ஏறத் தொடர்ந்தனர்: இறுதியில், உன் குகைக்கு அப்பாலிருக்கின்ற அழுக்கு மூடிய குட்டையுள் தம் மோவாய்க்கட்டைவரை கூத்தாட அவர்களை விட்டு வந்திருக்கின்றேன் (13).

ப்ராஸ்ப்பீரோ:—செய்கை இது நன்று, எனது பறவாய் (14). நின் உருவத்தை இன்னும் காணப்படாமலே வைத்துக்கொள். என் வீட்டிலுள்ள வீண் பகட்டுப் பண்டங்களை, நீ போய் அவைகளை, இத் திருடர்களைப் பிடிப்பதற்குப் பார்வையாகக் கொண்டு வா (15).

ஏரியல்:—போகின்றேன், போகின்றேன்.

[போகின்றான்]

ப்ராஸ்ப்பீரோ:—ஒரு பேய், பயிற்சியோ ஒரு போதும் ஒட்டாத இயற்கையுடைய வொரு பிறவிப் பேய்; அவன்பொருட்டு யான் இரக்கமுடன் ஏற்றுக் கொண்ட பிரயாசைகள் எல்லாம் பாழாயின, முற்றிலும் பாழாயின; வயதோடு அவன் உடலும் வர வர விகாரமாகி வளர்வதுபோல் அப்படியே அவன் மனமும் அழுகுகின்றது (16). கதறக் கதற நான் அவர்களையெல்லாம் அவத்தைப் படுத்துவேன்.

படுகின்ற காட்சிகள் எந்தப் பதார்த்தத்தால் செய்யப்பட்டிருக்கின்றனவோ அதே பதார்த்தத்தால்தான் நாமும் செய்யப்பட்டிருக்கின்றோம். நாமும், கண்ட கனவின் பொருள்போலப் பொய்யே—என்பது பொருள்.

(9) நமது அற்ப ஆயுளும் மரணமாகிய ஒரு பெருந் தூக்கத்தில் முடிவடைகின்றது—என்பது பொருள்.

குறிப்பு:—பிறர் தனக்கு இழைத்த தீங்குகளின் நினைவு எழுந்தவுடன், ப்ராஸ்ப்பீரோ, கல்வியும் அறிவும் அநுபவமும் வாய்ந்த அவன்தன்மைக்கு இணங்க, பகைமையும் வெகுளியும் பழிவாங்கும் நோக்கமுங் கொள்ளாமல் பிரபஞ்சத் தோற்றங்களின் மாயையையும், மானுட வாழ்க்கையின் நிலையாமையையுங் கருத்துட்கொண்டு, அன்னதோர் உலகில் தான் பட்ட பொல்லாங்கை ஒரு பொருளாக மதியாமல் ஆறிவிடும் செம்மையை இங்குச் சிந்தித்துணர்தல் நலம். ஷேக்ஸ்ப்பியரின் மிக்க புகழ்பெற்ற வாக்கியங்களில் இது ஒன்று. இவரது கல்லறைமீது நாட்டிய ஞாபகக் கட்டிடத்தில் இவ்வாக்கியங்களைப் பொறித்திருக்கின்றனர்.

(10) உன்னுடைய சித்தப்படி செய்வதற்கு யான் என்றும் காத்திருக்கின்றேன்—என்பது பொருள்.

(11) குடிவெறியாட்டங்களிடையேயும், உன்னைக் கொல்ல வரவேண்டுமென்ற கருத்தினை அவர் மறக்கவில்லை—என்பது பொருள்.

(12) முதுகு பழகாத - ஏறி உகைப்பதற்குப் பழக்கிவைத்திராத. ஏரியலின் இசையைக் கேட்டதும், காலிபனும், ஸ்ட்டிபானோவும், ட்ரின்குலோவும், மூக்கைத் தூக்கி மேலே நிமிர்த்தியது, முகர்ந்தறியப்படுவது பாட்டென்று அவர் கருதியதுபோல் தோன்றியது—என ஏரியல் பரிகசிக்கின்றான்.

(13) நான் கொட்டி இசைத்த பறையின் ஒலியால் மயங்கிய அவர்களை, முட்புதர் அடர்ந்த நெறிகளின் வழியாய்க் கொணர்ந்து, அழுக்குக் குட்டையில் இறக்கிவிட்டேன்; அதனின்று கரையேறமாட்டாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்—என்பது கருத்து.

(14) பறவாய், என்று ப்ராஸ்பீரோ ஏரியலை அருமையாக அழைக்கின்றான்.

(15) பார்வை - காட்டுமிருகங்களைப் பிடிப்பதற்கு வேடர் பழகிய மிருகங்களைக் கட்டிவைப்பார். இவை பார்வை எனப்படும்.

(16) இது காலிபனைக் குறித்துச் சொன்னது.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[674-வது பக்கத் தொடர்ச்சி]

சுழலான் வீரன் சுழன்றன யாவும்.

தேற்றிய தம்பியோடும் இராமன், தனிவிட்ட சீதையின் நிலைதேர விரைவதல்லால் கருமம்வேறில்லையென்று கடுகிவந் தடைதலும் அவ்வயின் அவளைக் காணாமல், உடலை ஓரிடத்து விட்டுச்சென்ற உயிரானது மீண்டுமதனை நாடிவந்தபோது காணாமல் திகைத்ததென்ன நின்றான். கழியொடிந்தயாழென அவன் மனம் இசையொழிந்து கைத்தது. அரற்றினனலன் புலம்பினனலன், "ஓ சீதாய், கைகேயினுடைய எண்ணம் இன்று நிறைவேறிவிட்டது" என்று யாரையும் பழுதுரைத்தானல்லன். "ஐயோ! சந்தன களபம் பூசப்பெற்ற என் நாயகியின் திரண்ட முலைகள் அரக்கனால் உண்ணப்படும்பொழுது இரத்தத்தில் மூழ்கியிருக்கும், இது நிச்சயம்" என ஓலமிட்டானல்லன். மான்களையும் மலைகளையும் மரங்களையும் கரிகளையும் பரிதியையும் காற்றையும் சீதைசென்ற வழி வினவினனல்லன். ஓடியோடி யலைந் தவளைத் தேடினனல்லன். சீதையைத் தானிழக்க அதற்கெதிர் மூவுலகங்களையும் அழிப்பனென்றுஆரவாரஞ்செய்து அச்சுறுத்தினனல்லன். இவையனைத்தும் இன்னபிறவும் வடநூன்முனிவர் வாய்பாடு. துன்னியவிக் கடுந்துயர் மெய்யாயின் அதற்கு அவன் அழியாதவுள்ளம் அழிதலே சாலும். அஃதன்றி இவ்வீரன் அடங்காத ஆரவாரங்கள் புரிந்திருப்பானாயின், இவன்நிலை கண்டு இரக்கம் சுரக்குமோ வென்னும் ஐயமே எழுகின்றது. எனின்,

ஓ லக்ஷ்மணா,தேவர்கள் சீதையை என்னிடம் சேர்க்காது ஒழிவார்களாயின் ஊழிக்காலத்தில் அழிகின்றஇம்மூவுலகங்களையும் இப்போதே நாசம் பண்ணிவிடுகின்றேன். சீதையைஎன்னிடம்சேர்க்கார்களாயின் இந்த நிமிஷத்திலேயே என்னுடைய பராக்கிரமத்தை இந்திரனை முன்னிட்ட தேவர்கள் காண்பார்கள். ஓ,லக்ஷ்மணா, என் வில்லினின்று இடையறாமல் விடப்படும் பாணங்களால் மொத்துண்டு ஆகாசத்தில் யாரும் செல்லமாட்டார். விலங்குகளும் பறவைகளும் மயங்கி அழிந்

துவிடும்; உலகம் நிலைகுலைந்து தலைதடுமாறிப் போம். கர்ணபரியந்தம் வில்லையிழுத்து வளைத்துப் பிராணிகளால் தாங்கமுடியாத என் அம்புகளால் சீதையின் நிமித்தம் இவ்வுலகில் பிசாசர்களும் அரக்கர்களும் இல்லையாம்படி செய்கின்றேன். கோபத்தால் விடப்படும் என் பாணங்களுடைய பலத்தையும் அவைகள் வெகு தூரம் போவதையும் தேவர்கள் இன்று பார்க்கட்டும். மூன்று உலகங்களும் என்கோபத்தால் நாசமடைந்து தேவர்கள், அசுரர்கள், பிசாசர்கள், ராக்ஷசர்கள் ஒருவரும் இல்லையாவார்கள். தேவர்கள் அசுரர்கள் யக்ஷர்கள் ராக்ஷசர்கள் முதலியவர்களுடைய இருப்பிடங்கள் என்பாணங்களால் பிளப்புண்டு துகளாய்ப் போம். உலகமெல்லாவற்றையும் தலைகீழாக்கி விடுவேன். எனது சீதையை அவளிருந்தபடி அல்லது இறந்தபடி அல்லது அவளை எடுத்துப் போனபடி என்னிடம் தேவர்கள் கொண்டுவந்து சேர்க்கார்களாயின் யான் என்னுடைய பாணங்களால்சராசரமனைத்தையும் அழித்துமாற்றிவிடுவேன்''

என்றென்று இராமன் அறைகூவி அழிவுபேசியதைக் கேட்ட அமரர் முதலாயினோர், அரியும் இன்று அரனும் பெற்றிநோக்கிச் சிறிது தம்முளே சிரிப்பை மறைக்க முயன்றாலும் முயலலாம். இராமனுக் கெய்திய இத்தனைய துயர்நிலை சந்திரகுல மன்னனொருவனுக்கும் ஒருகால் நேர்ந்தது. புரூரவ மன்னன் இவ்வாறே தன் அரும்பெறற் காதலி உருப்பசியை வனத்திடை, மறைந்தவகை தெரியாமல் இழந்தான். அவனது தபுதார நிலைப்பத்தை, 'விக்ரமோர்வசீயம்' என்னும் நாடகத்தில் சித்தரிக்க காளிதாச மகாகவி, வான்மீகர் வழியை மெல்லநெருங்கி விரைந்து அகன்றுவிடும் பான்மை இங்குநினைவின்கண் வருதற்குரியது. ஊர்வசி மறைதலும் அவ்வேந்தன் எம்மருங்குந் தேடியுங் காணாமல் ஆற்றாத் துயரெய்தி விம்மலோடும், உணர்வழிந்து, மயிலையுங் குயிலையும் மதக் கரியையும் விளவிப் பின் கைத்த சிந்தையனாய் வெருளி பெருக, “காலத்திற்கும் அதிபர் என்று அரசரை அழைப்பார் அறிஞர்—இதோ எனது ஆணையை நிறுவி இருதுக்கள் இயங்காமல் நிறுத்திவிடுவேன் காண்” எனச் சீறி, சீதையை யிழந்த இராமனென்னப் பொங்கினுயினும், அந்நிமிடமே, “விண்ணின்று தென்றலை இனிது வரவழைத்து இத் தருக்களெல்லாம் கணக்கில் மலர்பொலிய ஒளிர்வனவாய்க் காற்றின்மீது களிநடம் புரிகின்றன. மதுவிற் களித்த வண்டுகள், தாழ்ந்து முரன்று மெல்லிசை நல்க,குயிலின் ஆழ்ந்து பருத்த இழுமென் பாடல் முழங்குகின்றது. ஆதலின் காலக் கதியைக் கடிந்திடை தடுக்க இசையேன்” என அமைதியுற்று ஓய்ந்தவாறுங் காளிதாசனுல் கூறப்பெறுகின்றது. வான்மீகர் நூலில் இராமன் எய்தாத மென்மை இங்குக் காளிதாசன் நாடகத்தில் புரூரவனுக்கு வாய்த்தது.

கம்பர் என் செய்தார்? இராமன் இங்குத் தன் வான்மீகர் முதலைப்போல் சீறவுமில்லை, காளிதாசன் காட்டிய அம் மதிகுல மன்னனைப்போல் சீறிப் பின் ஆறவுமில்லை. சீறினுயின் அவனைக் கண்டு ஒன்றும் அஞ்சியிருக்காது, ஆறினுயின் அவனுக்குச் சில இரங்கி யிருக்கலாம். கைத்த சிந்தையன் திகைத்து நின்றான், அவ்வளவே. ஆதலாற்றான் இவன் அழிக்கப்புகாத சராசரங்களனைத்தும் அச்சம் மீதூர,

மண்சுழன் றது மால்வரை சுழன் றது மதியோர்
எண்சுழன் றது சுழன் றதவ் வெறிகட லேழும்
விண்சுழன் றது வேதமுஞ் சுழன் றது விரிஞ்சன்
கண்சுழன் றது சுழன் றது கதிரொடு மதியும்

[பூமி சுழன்றது,பெரியமலைகள் சுழன்றன, அறிவுடையோர் எண்ணங்கள் சுழன்றன, அலைமோதுகின்ற எழு கடல்களும் சுழன்றன, வானம் சுழன்றது, வேதங்களும் சுழன்றன. பிரம்மனுடைய கண்களும் சுழன்றன, சூரியனும் சந்திரனும் சுழன்றன]

இவ்வாறு நிகிலப் பொருள்கள் யாவும், அறிஞர் கண்களும், வேதமுடன் விரிஞ்சன் கண்களும், திகைத்துநின்ற அத்திருமகன் மனத்தெதிர் மருண்டு சுழல,

அறத்தைச் சீறுங்கொ லருளையே
சீறுங்கொ லமரர்
திறத்தைச் சீறுங்கொன் முனிவரைச்
சீறுங்கொ றீயோர்
மறத்தைச் சீறுங்கொ லென்கொலோ
முடிவென்று மறையி
னிறத்தைச் சீறுங்கொ னெடுந்தகை
யோனென நடுங்கா

[பெருந்தகையான இராமன், அறத்தையே சீறுவானே, கருணையையே சீறுவானே, தேவர்களின் ஆற்றலைச் சீறுவானே, தீயோர்தம் பாவத்தைச் சீறுவானே, வேதங்களின் மார்பையே சீறிப் பிளந்துவிடுவானே என்றும், இச்சீற்றத்தின் முடிவு யாதாகுமோ என்றும் நடுங்கி]

நீல மேனிநன் னெடியவன் மனநிலை திரிய
மூல காரணத் தவனொடு முடிவுற முற்றுங்
கால மாமென்க் கடையிடு கணிக்கரும் பொருள்கள்
மேல கீழுறக் கீழன மேலுறம் வேலை

[முடிவுற எண்ணுதற்கரிய பொருள்கள் எல்லாம், நீலநிறமுடைய நன்மையனுகிய இராமனுடைய மனநிலைதிரிந்ததால், எல்லாவற்றையும் படைப்பதற்குக் காரணமாகிய பிரம்மனுடன் எல்லாம் அழியும் ஊழிக்காலத்திற்போல, மேலுள்ளவை கீழும் கீழுள்ளவை மேலுமாகத் தடுமாறியபொழுது]

தேரி னுழியுந் தெரிந்தன நீ
திண்டுக வஞ்சிப்
பாரி னேடுகொண் டகழ்ந்ததும்
பார்த்தனம் பயனின்
றேநின் தன்மையி தென்னெனப்
தாரனிலா தவர்போல்
தூரம் போதன்முன் றொடர்துமென்
றிளையவன் றொழுதும்

[தேர்ச் சக்கரத்தின் சுவட்டையுந் தெரிந்துகொண்டோம். சீதையைத் தொடுவதற்கு அஞ்சித் தரையுடன் பெயர்த்துக்கொண்டு போயிருப்பதையும் பார்த்தோம். இனிப் பயனின்றி, வலிமையற்றவர்போல் வீணே யோசித்துக்கொண்டிருப்பதை என்னவென்பது. சீதையை அவன் மிக்க தூரம் கொண்டுபோவதன்முன் நாம் தொடர்ந்து செல்வோம், என்று இலக்குவன் வணங்குதலும்]

ஆம தேயினி யமைவதென் றமலனு மெய்யிற்
றும வார்கணைப் புட்டிலு முதலிய தாங்கி
வாம மால்வரை மரனிவை மடிதர வயவர்
பூமி மேலவன் றேர்சென்ற நெடுநெறி போனர்

[குற்றமற்றவனுகிய இராமன், ஆம் அப்படிச் செய்வதே இனித் தகும் என்று உடன்பட, வீரர்களாகிய அவ்விருவரும், மெய்ம்மையே போன்ற ஒளியுடைய அம்பறுத்தூணி முதலியவைகளைக் கட்டிக்கொண்டு, அழகிய பெரிய மலைகளும் மரங்களும் அழியும்படி பூமியில் அவன் சென்ற நீண்ட நெறியே போயினர்]

இராமன்துயரத்தைக் கம்பர் இழைத்துக் காட்டியதெல்லாம் இத்தனையே. இராமன் மனமும் நிலையும் கடிய வேகமுடன் சுழன்று தடுமாறினன் என்ற வான்மீகருக்கெதிர், இராமன் திகைத்து நிற்க, வேதமே முதல் யாவையும் சுழன்றன வென்னும் கம்பர் சித்திரம்பரிவுமிகக் காட்டுகின்றது. இராமன் சினந்து அச்சுறுத்துவதற்கெதிர் அமரரோடு அனைவரும் தாமே யஞ்சி நடுங்கிய திறம் நன்றெனக் காணல் அரியதன்று. இன்னும்,

மண்ணின் மேலவன் றேர்சென்ற சுவடெலா மாய்ந்து
விண்ணி னேங்கிய தொருநிலை மெய்யுற வெந்த
புண்ணி னூடுறு வேலென மனமிகப் புழுங்கி
யெண்ணி நாமினிச் செய்வதெ னிளவலே யென்ருன்

[தரையின்மேல் தேர் சென்ற சுவடு மறைந்து, அத்தேர் ஆகாயத்தில் எழுந்துவிட்ட ஒரு தன்மையின் உண்மை விளங்க, இராமன், சுட்டபுண்ணிற்குள் வேல் நுழைவதுபோல் மனம் மிகப் புழுங்கி, “எண்ணி நாம் இனி என்ன செய்யக்கிடக்கின்றது, இளவலே” என்ருன்]

என்னுங்கால், “நாமினிச் செய்வதென் இளவலே” என்றசொற்களால் நமது இதயத்தில் சுரக்கும் இரக்கத்தின் ஆயிரத்தி லொருபங்கு கூட்ட இராமனது ஆரவார அவலங்கள் அனைத்துஞ் சேர்ந்து பிறப்பிக்க இயலாது. அதிகத்தாலின்றி, திறமறிந்து அடக்குவதன் சூழ்ச்சியிற்றுனே அவலச்சுவை நயம்பெற இயலும். பார்ப்போர்க்குப் பரிவுதூண்ட, ஜர்மனிய நாடகாசிரியர் ஷில்லர் என்பவர், மக்களெல்லாம் முதியோரும் பாலகரும் பேதுற்று மடியும்படி ஒருநகரம் முழுவதையும் தீ வைத்து எரித்திடுவார், ஷேக்ஸ்பியரோ, ஒரு சிறு கைத்துணி (ஒத்தெல்லோ நாடகத்தில்) தவறி விழுவதைக் காட்டி நம் உள்ளம் அடங்கலும் கொள்ளைகொள்ள வல்லவராகின்றுர். 'நாம் இனிச் செய்வதென் இளவலே' என்பது கம்பருக்குப்போதும்.

இளவலும் இயன்றன சொல்லித் தேற்றி இராமனுடன் மேற்கொண்டேக, யோசனை இரண்டு கடந்ததும், வீணைக்கொடியொன்று உடைந்து விழுந்திருப்பதைக் கண்டனர். இக்கொடியைக் கண்டும் அக்கொடி தூக்கியவன் யாரென்பது இவர் தெரிந்துகொள்ளாமையால், அதனைப் புதிதுபடைத்து இராவணனுக்குஅளித்திருந்த கம்பர்தம் கற்பனை நன்குவெளியாகின்றது. இக் கொடியைக் கண்டவுடன், சீதையின் பொருட்டு கண்டகக் கள்வனேடும் அமரர் பொருதனர்கொல் என்று அயிர்த்தவர்,பின் ஓர் பறவையின் மூக்கினல் அது ஒடிந்த பெற்றிதேர்ந்து, இராமன் புண்டரீகக் கண் புனல்வர,

நோக்கி னுலைய நொய்திவ ணெய்திய நந்தை
மூக்கி னுலிது முறிந்தமை முடிந்ததான் மொய்ம்பிற்
றூக்கி னனடு வடுத்தது தெரிகிலந் தமியன்
யாக்கை தேம்பிடு மெண்ணரும் பருவங்க ளிறந்தான்

[ஐய, நோக்குமிடத்து, விரைந்து வந்து சேர்ந்த நின் தந்தையாகிய சடாயுவினது மூக்கினல் இக்கொடி முறிபடநேர்ந்தது. வலிமையுடன் தாக்கியும் இருக்கின்றுன்; இடையில் யாது நேர்ந்தது என்பது தெரியவில்லை; ஒருவரும் துணையில்லாதவன். உடல்மிக மெலியும்படி கணக்கற்ற வயது சென்றவன்]

எனப் புகன்றுன். நன்றே அது என்று இலக்குவன் எண்ணினன். அசைக்கலாற்ரு வலிமையுடையவன் சடாயுவாதலால் அற்றைப்பொழுதளவும் எதிர்த்து நிற்பான், தாமும் சென்று சேர்ந்து சீதையை மீட்கினும் மீட்கலாம் எனத் துணிந்து மேலேகினர். ஏகுப் நெறியில் முறிந்துகிடந்த இராவணன் வில் சூலம் புட்டில் கவசம் சாரதி குதிரைகள் முதலியவற்றைக் கண்டனர். இராவணனது அணிகலன்களுங் கிடந்தன. அவைகளைக் கண்டு—

தோள ணிக்குலம் பலவுள குண்டலத் தொகுதி
வாளி மைப்பன பலவுள மணிமுடி பலவால்
நாள னைத்தையுங் கடந்தனன் தமியனந் தாதை
யாளி போல்பவர் பலருளர் பொருதன ரிளையோய்

[தம்பியே, தோளணிகளின் கூட்டம் அனேகம், ஒளி வீசுகின்ற குண்டலங்களின்கூட்டம் அனேகம்,இரத்தின கிரீடங்கள் பல. ஆகையால் வயதுசென்ற நம் தாதை சடாயு தனியாக, அவனுடன் போர்செய்தவர் சிங்கம் போன்றவர் பலர் ஆதல்வேண்டும்]

என்று ஊகித்தது ஒருவாறு ஏற்புடையதே. இதே குறிகளைக்கண்ட இராகவன் வான்மீகத்தில், சீதையின்பொருட்டு அரக்கர் பற்பலர் அங்கு ஒருவரோடொருவர் எதிர்த்துத் தம்முள் பெரும்போர் செய்திருக்கவேண்டும் என்று எண்ணியதும் அரக்கர்தம் குணத்திற்குப் பொருத்தமுடைய தாகலாம். அங்கு இலக்குவன், பொருதவன் ஒருவனே என்று, அங்குள்ள அடையாளங்களை ஆராய்ந்து எதிர் உரைத்தனன்.எனினும் ஜடாயு தடுத்ததென்பதை அவன் சிறகொடிந்துகிடக்கக் காணுமளவும் எண்ணுத அவ்விலக்குவன், அவ்வொருவனுடன் எதிர்நின்ற பொருதவனும் ஒருவன் இருந்திருத்தல் வேண்டுமென்னமதிக்க நினைத்திலன். இங்கு வந்த இலக்குவனே துப்பறிதிறமையிற் சிறிது சிறக்கின்றுன். ஒன்று ஜடாயு, அதுபறந்தெழுந்துபொருமாதலின் அதன் காற்சுவடு காணப்படாது. மற்று குவிந்திருந்த குண்டலங்களும் மணிமுடிகளும் பலவாயினும், பலர்கூடிப் பொருதகுறி அடிச்சுவட்டிற் காண்கிலன். ஆதலின்,

திருவி னுயக னுரைசெயச் சுமித்திரை சிங்கம்
தருவி னீளிய தோள்பல தலைபல வென்றுல்
பொருது தாதையை யித்தனை நெறிக்கொடு போன
னொருவ னேயவ னிராவண னெமென வுரைத்தான்

[இலக்குமிக்கு நாயகனுகிய இராமன் அவ்வாறு சொல்ல, சுமத்திரையின் புத்திரனுகிய சிங்கம்போன்ற இலக்குமணன், மரம்போல் நீண்ட தோள்களும் தலைகளும் அவனுக்கு இருந்தனவென்பது, இவ்வணிகலன்களைக் கொண்டு விளங்கினல், நமது தாதையுடன் பொருது கொண்டே இவ்வளவுதூரம் போயிருப்பவன் ஒருவனே, அவனும் இராவணன் ஆதல் வேண்டும், என்று ஊகித்து உரைத்தான்]

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

“சத்வைத்யசாலை” நஞ்சன்கூடு

தைலங்கள்:

சந்தனதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக ”	0-12-0
பிருங்காமலக ”	0-12-0
ஸ்திரீகளுக்கு	
ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக.தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) ம.ட.ப.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசோந்த திற்மணக்கு எண்ணெ காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[புஸ்தகங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[676-வது பக்கத் தொடர்ச்சி]

வீ

2180 வீங்கல் பெருமையு மோங்குதலு மாகும்.
2181 வீசல் பரத்தலு மெறிதலுஞ் சாதலும்
கொடுத்தலு மிகுத்தலுங் கூறினர் புலவர்.
2182 வீதி தேரோடலும் வெருவலும் வீதியும்.
2183 வீதல் கெடுதலுஞ் சாவு மாகும்.
2184 வீரம் விறலு மோங்கலு மாகும்.
2185 வீரையோர் மரமும் துன்பமுங் கடலும்.
2186 வீபுட் பொதுவுஞ் சாவு நீக்கமும்
பூவு மெனவே புகன்றனர் புலவர்.

வெ

2187 வெகுளி மிஞ்சிடலுங் கோபமு மாகும்.
2188 வெடிவெள் ளிடியு மச்சமும் வெளியும்
பரிமளித்தலும் புகையும் பகர்ந்தனர் புலவர்.
2189 வெட்சி செச்சையு மிகுநிரை கவர்தலும்.
2190 வெண்மை யறியா மையும் வெள்ளியும்.
2191 வெதிர் கீசகமுஞ் செவிடு மாகும்.
2192 வெப்பம் வேனிலுங் கோபமு மாகும்.
2193 வெய்யோன் கொடியனும் விருப்ப முடையோனும்
பானுவு மெனவே பகர்ந்தனர் புலவர்.
2194 வெயில் சூரியனுஞ் சுடர்களு மாகும்.
2195 வெள்ளை சங்கும் வெண்பாவுந் தகரும்
வெள்ளாடும் வெள்ளையும் வெளிறுங் கள்ளும்
மூன்னு ளார்மனு மொழிந்தனர் புலவர்.
2196 வெளிறு வெள்ளையு மறியா மையுமாம்.
2197 வெள்ளம் புனலும் வேலைக் கரையும்
சடலுமோ ரெண்ணும் மிகுதியு மாகும்.
2198 வெள்ளில் விளாவும் பாடையு மாகும்.
2199 வெளில்வெண் டயிரும் தயிரின் மத்தும்
பாடையு மணிலும் வேழத் தம்பமும்.
2200 வெள்ளி சுக்கிரனும் வெண்டாது மாகும்.
2201 வெறியணங் காடலும் அச்சமுங் கலக்கமும்
பேயு நோயும் வாசமுந் தகரும்.
2202 வெறுக்கை பொன்னும் வெறுப்புஞ் செல்வமும்
கனவும் விழுப்பொருளுங் கழறினர் புலவர்.

வே

2203 வேக முடலுங் கிழும் வேகமும்.
2204 வேங்கை பொன்னும் புலியும் வேங்கையும்.
2205 வேசரி கோவேறு கழுதையுங் கரமும்.
2206 வேட்டுவன் மகமும் வேடனு மாகும்.
2207 வேணி மயிர்ச் சடையும் விண்ணு நதியும்.
2208 வேதிகை பலகையுந் திண்ணையும் வீதியும்
வினையு மியலம்பும் வேதனு மாகும்.
2209 வேதண்டங் க[யி]லையும் வெற்பும் யானையும்.
2210 வேந்த னிந்திரனு மதியு மிரவியும்
வியாழமு மரசனும் விளம்பினர் புலவர்.
2211 வேதனை துயருஞ் சுடலும் விளம்பும்.
2212 வேயே துளையுடைப் பொருளு மூங்கிலும்
ஒற்றும் வினையு முரைத்தனர் புலவர்.
2213 வேரி கள்ளுந் தேனும் வாசமும்.
2214 வேல்வேவை மரமும் படைக்கலப் பொதுவும்
மூங்கிலும் வேலா யுதமு மொழிவர்.
2215 வேலி மதிலும் விளைநிலமுங் காவலும்
ஊரும் வேலியு முரைத்தனர் புலவர்.
2216 வேலை கடற்கரையுங் கடலுங் காலமும்
தொழிலு மெனவே சொல்லினர் புலவர்.
2217 வேலன் முருகனும் வெறியாட் டாளனும்.
2218 வேலா வலயம் கடலும் பூமியும்.
2219 வேள்வி வேள்விக் குண்டமும் யாகமும்
கொடையும் பூசையுங் கூறினர் புலவர்.
2220 வேழங் கொறுக்கையுங் கரும்புந் தும்பியும்
மூங்கிலு மொலியும் வேழப் பூச்சியும்.
2221 வேள்மன் மதனுஞ் சளுக்கி வேந்தனுங்
குமரனு மெனவே கூறினர் புலவர்.
2222 வேளாளர் வள்ளலும் பொன்லா ணிபரும்
வேளா ளருமென விளம்பினர் புலவர்.
2223 வேளாண்மை வணங்கலு முபகா ரங்களும்
மெய்ம்மையு மெனவே விளம்பினர் புலவர்.

வை

2224 வைகல்புலர் காலையு மிறந்த காலமும்
தங்கலு மெனவே சாற்றினர் புலவர்.
2225 வைகறை விடியலும் யாமமு மாகும்.
2226 வையே கூர்மையும் வைக்கோலும் புல்லும்.
2227 வையந் தேருஞ் சிவிகையும் புவியும்
வண்டிலு மூர்தியு முரோகணியு மாகும்.

வௌ

2228 வௌவல் பிடித்தல் வௌவால் பறவையாம்.

பொதிகை நிகண்டு முற்றிற்று.

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக
சக்தியையும், தாது புஷ்டியையும்
கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed
During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000
received in proposals.

Life Assurance is security— for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000
For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta
For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)